இலவச காலாண்டு சமய இதழ்



# அகர தீபம்

www.akaram.eu

13.01.2022 - 14.03.2022




மாலை : 07 மலர் : 01

திருவள்ளுவர் ஆண்டு 2052

# நுழைவாயில்..



**அகர தீபம் வாசக அன்பர்களுக்கும், விளம்பர தார வள்ளல் பெருமக்களுக்கும் எமது ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தமிழர் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் நாம் மகிழ்ச்சி கொள்கிறோம்.**

நமக்கான எல்லாக் கதவுகளும் அடைபட்ட நிலையிலும், நம் அனைவருக்கும் தன் வாசலை அகலத் திறந்து வரவேற்று, ஆறுதலைத் தருவது எமது கடவுள் நம்பிக்கையும், அதற்கான அறிவும், ஆன்மீகத் தேடலும்தான். அதைத்தான்அகர தீபம் தனது ஆன்மீக அன்பர்களுக்கு வழங்கி வருகின்றது.

சென்ற இதழில் நாம் குறிப்பிட்டது போலவே அறிவியலும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும், கொரோனா என்கிற உலகப் பெருந் தொற்று நோயின் அழிவிலிருந்து உலக மக்களைக் காப்பாற்றத் தவறிவிட்டதோடு, அதன் புது அவதாரமான ஒமிக்கிறோனின் அரக்கத்தனமான வளர்ச்சியும், அழிவுகளும் உலக மக்களை மீளாத மரணபயத்துள் அடக்கும் நிலையைக் காண்கிறோம்.

இவற்றுக்கு மத்தியில் பிறந்துள்ள ஆங்கிலப் புதுவருடமும், தமிழர் எமது தைப்பொங்கல் விழாக்கால கொண்டாட்டங்களும் உங்களை இன்பக் கடலில் திளைக்க வைக்க வாழ்த்துகிறோம்.

அகர தீபத்தின் ஆன்மீக சேவை மேலும் தேவைப்படும் இன்றைய உலகில், அத்தகைய தேவையை இந்த இதழும் உங்களுக்குத் தரும் என்கிற நம்பிக்கையுடன் இந்த இதழை வழங்குகிறோம். எமது நம்பிக்கை தவறாயின், அதனை எமக்குச் சுட்டிக்காட்டி, நிறைவு செய்ய உங்களைப் பணிவுடன் கேட்டு விடை பெறும்...

**ஆசிரியர், அகர தீபம்.**

# சுபகாரியங்கள் கைகூட மஞ்சள்

சுபகாரியங்கள் கைகூடி வர நேரமும், காலமும் நமக்கு சாதகமாக இயங்கும். நீண்ட நாட்களாக ஒரு விஷயத்தை நாம் மனதில் நினைத்துக் கொண்டு இருப்போம். ஆனால், அந்த விஷயத்தை செயல்படுத்தும் நேரமும், காலமும் நமக்குக் கைகூடி வராது. நீண்ட நாட்களாக மனதில் ஒரு தொழிலைத் தொடங்க வேண்டும் என்று நினைத்திருப்போம். ஆனால், அந்தத் தொழில் தொடங்குவதற்கான நேரமும், காலமும் சரியாக நமக்கு அமையாது.

நல்ல சம்பளத்தோடு நல்ல வேலை கிடைக்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக முயற்சி செய்து வருவோம். ஆனால், நல்ல வேலையும் கிடைக்காது. அப்படியே கிடைத்தால் நல்ல சம்பளமும் கைக்கு வராது. சில பேர் நீண்ட நாட்களாக அவர்கள் வீட்டில் ஒரு நல்லதை நடத்தி பார்க்க வேண்டுமென்று நினைப்பார்கள். தன்னுடைய மகளுக்கோ, மகனுக்கோ திருமணம் நடைபெற வேண்டும் அல்லது திருமணம் ஆனவர்களுக்கு குழந்தைப் பேறு கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்களும் இருக்கிறார்கள்.

அதாவது இது சுபகாரியங்கள் வரிசையில் வந்துவிடும். சில பேருக்கு நீண்டநாட்களாக பணம் சேர்த்து நிலம் வாங்க வேண்டும். வீடு கட்ட வேண்டும். வீட்டிற்கு தேவையான ஆடம்பர பொருட்களை வாங்க வேண்டும். தங்கம் வாங்க வேண்டும் என்று இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும். சரி, உங்கள் மனதில் நீங்கள் எதை நினைத்து வைத்திருந்தாலும் சரி, நினைத்ததை நடத்திக் காட்ட நேரமும், காலமும் உங்களுக்குச் சாதகமாக கைகூடி வர மிக மிக சுலபமான பரிகாரம் உள்ளது.

இந்தப் பரிகாரத்திற்கு நமக்கு தேவையான பொருள் ஒரே ஒரு குண்டு மஞ்சள், தாழம்பூ சாரு, தாழம்பூ அவ்வளவு சுலபமாக நமக்கு இப்போது கிடைக்காது. ஆனால், தாழம்பூ எசன்ஸ் நாட்டு மருந்து கடைகளில் விற்கிறது. அதை நாம் பரிகாரத்திற்கு பயன்படுத்திக் கொள்வோம்.

காலையில் எழுந்து சுத்தமாக குளித்துவிட்டு பூஜை அறைக்கு செல்ல வேண்டும். மஞ்சள் இழைக்கும் கல்லில், ஒரு சொட்டு தாழம்பூ எசன்ஸ் விட்டு, இந்த மஞ்சளை எசன்சில் லேசாக குழைத்தால், மஞ்சள் விழுது நமக்கு கிடைத்துவிடும். அந்த விழுதைத் தொட்டு நெற்றியில் இட்டுக் கொள்ளுங்கள். அதன் பின்பு இறைவனை மனதார பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள். உங்களுடைய மனதில் நீங்கள் நினைத்து இருக்கும் எந்த ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமோ, அந்த ஒரு நல்ல காரியத்தை தினமும் இந்த பிரபஞ்சத்திடம் வரமாகக் கேளுங்கள்.

நவக்கிரகங்களையும், பஞ்சபூதங்களையும், குல தெய்வத்தையும் மனதில் நினைத்துக் கொண்டு நீங்கள் மனதில் நினைத்த அந்த ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்து வந்தால் 48 நாட்களில் நிச்சயமாக உங்களுக்கு நல்லதொரு வழி கிடைக்க நிறையவே வாய்ப்புகள் உள்ளது. நம்பிக்கையோடு முயற்சி செய்து பாருங்கள்.






அகர தீபம்

மாலை : 07 மலர் : 01

தலைமை
**த. இரவீந்திரன்**

ஆசிரியர்
**ஆதவன்**

ஆசிரியர் குழு
**வியாசன்**

வடிவமைப்பு
**ஈழமயூரன்**

ஒப்பு நோக்குனர்
**திரு.செ. அமுதவாணன்**



தொடர்புகளுக்கு

European Tamils Union e.V.
PO. Box 13 06 31,
44316 Dortmund,
Germany.

00 49 176 47 11 87 11

Email : akaratheepam@akaram.eu

www.akaram.eu



GERMANY, SWITZERLAND, FRANCE
ENGLAND, DENMARK, NORWAY,
HOLLAND, SWEDEN, ITALY, CANADA



© ETU e.V.2014 All rights reserved


ஸ்ரீ ராமருக்காக தன் உயிரையும் பொருட்படுத்தாது, தன்னிகரில்லா சேவையாற்றியவர் "ஸ்ரீ ஆஞ்சநேயர்". தன் பிரபு ஸ்ரீராமர் வைகுண்டம் சென்ற பிறகு "ஸ்ரீ ராமரின் புகழைப் பாடிக் கொண்டே இன்றும் சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டிருக்கும் அனுமன் தன்னை வழிபடும் பக்தர்களை பல நெருக்கடியான சூழ்நிலைகளில் ரட்சித்த நிகழ்வுகள் பல. அப்படியான ஒரு சம்பவம் தான் இது. அது முகலாயர்களின் ஆட்சிக்காலம். அந்த முகலாயர்களின் மதவெறியால் இந்துக்கள் துன்புற்ற போது அவர்களுக்கு ஆன்மிக சக்தியளிக்க "ஸ்ரீ ராமதாசரும்", "ஸ்ரீ பக்த துக்காரமும்" மராட்டிய மண்ணில் அவதரித்தனர். அதே காலத்தில் தன் வீரவாளின் மூலம், தன் திடீர் தாக்குதல் திட்டத்தால் முகலாயர்களின் தூக்கத்தைக் கெடுத்து, அவர்களுக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய "மராட்டிய சிங்கம் மாவீரன் சத்ரபதி சிவாஜியும்" அவதரித்தார். மேற்சொன்ன ஸ்ரீ ராமதாசரையும், பக்த துக்காராமையும் தன் ஆன்மிக குருவாக வாய்க்கும் பேறு பெற்றார் சிவாஜி.

அப்படி ஒரு சமயம் வனத்திலிருந்த "ஸ்ரீ ராமதாசரின்" ஆசிரமத்திற்கு தன் வீரர்கள் துணையின்றி தனியாகவே வந்தார் சிவாஜி. அப்போது "ஸ்ரீ ஆஞ்சநேயருக்கு" பூஜைகள் செய்து கொண்டிருந்த ராமதாசர், சிவாஜியை உள்ளே அழைத்து அப்பூஜையில் பங்கேற்கச் செய்தார். அப்பூஜையில் பங்கேற்ற சிவாஜி ஆழ்ந்த தியான நிலைக்கு சென்றார். அப்போது ஏதோ ஒரு காரணத்திற்காக வெளியில் வந்த ராமதாசர், முகலாய வீரர்கள் சிவாஜி தனியாக இந்த ஆசிரமத்திற்கு வந்ததை அறிந்து, அவரை கொல்வதற்கு இந்த ஆசிரமத்தைச் சுற்றிவளைத்து மெதுவாக முன்னேறிக்கொண்டிருந்ததைக் கண்டார்.

உடனே தன் சீடன் சிவாஜிக்கு எவ்வித ஆபத்து நேரக்கூடாதென தன் தெய்வமான "அனுமனை" வணங்கினார். அப்போது ஒரு அதிசயம் நடந்தது. எங்கிருந்தோ திடீரென்று வந்த காட்டுக் குரங்குகள் கூட்டம், ஆசிரமத்தை நோக்கி முன்னேறிய முகலாய வீரர்களைக் கடித்துக் குதறத் தொடங்கின. குரங்குகளின் இந்த முரட்டுத்தனமான தாக்குதலைத் தாங்க முடியாமல் முகலாய வீரர்கள் அங்கிருந்து தலைத் தெறிக்க ஓடினர். சற்று நேரம் கழித்து தியானம் கலைந்து, நடந்ததெல்லாம் கேள்விப்பட்ட சிவாஜி, ராமதாசருக்கு நன்றி கூறினார். அப்போது ராமதாசர், தான் சிவாஜியின் உயிரை காப்பாற்றவில்லை என்றும் தான் வழிபடும் "ஸ்ரீ அனுமனே" சிவாஜியைக் காப்பாற்றியதாக கூறினார். "ஸ்ரீ அனுமன்" தனக்கு அருள்புரிந்ததை எண்ணி மெய்சிலிர்த்தார் வீரசிவாஜி.

## மராட்டிய மன்னன் சிவாஜியை அனுமனே நேரில் சென்று காத்த உண்மை சம்பம்.





# கம்சன் வதம்

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும், பலராமரும்; மல்யுத்தக் களத்தினுள் மாபெரும் மல்லர்கள் யாவரையும் கொன்றபின், எஞ்சியிருந்த மல்லர்கள் உயிருக்குப் பயந்து கோதாவை விட்டு ஓடினார்கள். கிருஷ்ணரின் நண்பர்களான ஆயர் குலச் சிறுவர்கள் அவரையும், பலராமரையும் அணுகி மிகுந்த மகிழ்ச்சியுடன் அவர்களின் வெற்றியைப் பாராட்டினார்கள். அங்கு கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் கரவொலி எழுப்பினார்கள். அவர்களின் மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

பிராமணர்கள் மனமுவந்து கிருஷ்ணரையும், பலராமரையும் புகழ்ந்து பேசினார்கள். கம்சன் மட்டும் வாளாவிருந்தான். அவன் கைதட்டவுமில்லை, கிருஷ்ணரையும், பலராமரையும் வாழ்த்தவுமில்லை. கிருஷ்ண பலராமரின் வெற்றியைப் பாராட்டும் வகையில் முரசுகள் ஒலித்ததை அவன் விரும்பவில்லை. மல்லர்கள் கொல்லப் பட்டதும், எஞ்சியவர்கள் உயிருக்குப் பயந்து ஓடியதும் அவனுக்கு மன வருத்தத்தைத் தந்தது. அவன் உடனே முரசுகள் ஒலிக்கப் படுவதை நிறுத்தும்படி கட்டளையிட்டு, தன் நண்பர்களை நோக்கிப் பின் வருமாறு பேசினான்:

“வசுதேவரின் இந்த இரு மகன்களும் உடனடியாக மதுராவிலிருந்து விரட்டப்பட வேண்டுமென்று நான் கட்டளையிடுகிறேன். அவர்களுடன் வந்திருக்கும் ஆயர்குலச் சிறுவர்களும் விரட்டப்பட்டு அவர்களின் உடமைகளெல்லாம் பறிக்கப்பட வேண்டும். நந்த மகராஜாவை அவரின் தந்திரமான நடத்தைக்காக உடனே கைது செய்து, கொல்ல வேண்டும். அயோக்கியனான வசுதேவனும் உடனடியாகக் கொல்லப் படவேண்டும். என் விருப்பத்திற்கு எதிராக எப்போதும் என் எதிரிகளை ஆதரித்த என் தந்தையான உக்கிரசேனரும் உடனே கொல்லப்பட வேண்டும்”.

இவ்வாறு கம்சன் பேசியதும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் மிகவும் கோபமடைந்து, கணப்பொழுதில் கம்சனின் காவலர்களைக் கடந்து கம்சனை அணுகினார். இதை எதிர்பார்த்திருந்த கம்சன், தன் வாளை உறையிலிருந்து எடுத்துக் கிருஷ்ணரைத் தாக்க முற்பட்டான். அவன் அப்படியும் இப்படியுமாக வாள் வீசியபோது, மிகுந்த பலத்துடன் கிருஷ்ணர் அவனைப் பிடித்துக் கொண்டார். சிருஷ்டி முழுவதற்கும் துணையானவரும், தம் தொப்புளிலிருந்து பிரபஞ்சத்தை உண்டு பண்ணியவருமான முழுமுதற் கடவுள் கம்சனின் கிரீடத்தைக் கீழே தள்ளித் தரையில் உருளச் செய்தார்.

அதன்பின் கம்சனின் நீண்ட தலைமுடியைத் தம் கையில் பிடித்துக் கொண்டு, அவனை ஆசனத்திலிருந்து இழுத்து வந்து, மல்யுத்த மேடையின் மீது எறிந்தார். அதன்பின் கிருஷ்ணர் உடனடியாகக் கம்சனின் மார்பின் மேல் ஏறி அமர்ந்து கொண்டு அவனை மீண்டும், மீண்டும் ஓங்கி அடித்தார். அவரின் முஷ்டியிலிருந்து புறப்பட்ட அடிகளைத் தாங்க மாட்டாமல் கம்சன் உயிர் நீத்தான்.

துன்பங்களைப் போக்கும்

# வேல் வழிபாடு



கலியுகத்தின் கண்கண்ட தெய்வம் முருகப் பெருமான். தீய சக்திகளிடம் இருந்து நம்மை காக்க வேலாயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு நிற்கும் வேலன் வழிபாட்டைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். நமக்கு எவ்வளவு பெரிய துன்பங்கள் இருந்தாலும், அந்த துன்பத்தைத் துவம்சம் செய்யக்கூடிய சக்தி கொண்டதுதான் முருகன் கையில் இருக்கும் வேல். நிறைய பேர் வீட்டில் வேல் வழிபாடு செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கும். ஆனால், அவர்களுடைய வீட்டில் வேல் இருக்காது. வேல் வாங்கி வீட்டில் வைத்திருக்க மாட்டார்கள். இருப்பினும் பரவாயில்லை. வேல் இல்லாதவர்கள் வீட்டிலும் வேல் வழிபாட்டை செய்யக்கூடிய ஒரு சூட்சமமான சுலபமான வழிபாட்டு முறையை பற்றித்தான் நாம் தெரிந்து கொள்ளப் போகின்றோம்.

சுத்தமான மஞ்சளை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள். முடிந்தால் மஞ்சளை வாங்கி மில்லில் கொடுத்து அரைத்து, கலப்படமில்லாத மஞ்சளைக் கூட இந்தப் பூஜைக்கு நீங்கள் பயன்படுத்தலாம். அது நம்முடைய விருப்பம் தான். எந்த கலப்படமும் இல்லாத சுத்தமான மஞ்சள் தூள் கொஞ்சம் எடுத்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் பன்னீரையும் எடுத்துக் கொள்ளுங்கள். சிறிய கிண்ணத்தில் மஞ்சள் பொடியைப் போட்டு, பன்னீர் ஊற்றி நன்றாக குழைத்து இந்த மஞ்சளைத் தொட்டு உங்கள் வீட்டு பூஜை அறை சுவற்றில் வேல் வரைய வேண்டும்.

மனதார வாய் நிறைய ‘ஓம் முருகா’ என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே உங்களுக்குத் தெரிந்தபடி ஒரு வேலை அழகாக வரைந்து கொள்ளுங்கள். வேலுக்கு நடுவில் விபூதியின் மூன்று கோடுகள் இட்டு, அதாவது பட்டை இட்டு, அந்தப் பட்டைக்கு நடுவே ஒரு குங்குமத்தையும் இட்டு விடவேண்டும். இப்போது உங்களுடைய வீட்டில் சக்தி வாய்ந்த வேல் வந்துவிட்டது. இந்த மஞ்சளினால் நீங்கள் வரைந்த வேலை, வேலனாக பாவித்து தினம்தோறும் வேல் வழிபாடு செய்து வர வேண்டும்.

காலையில் எழுந்து சுத்தமாகக் குளித்துவிட்டு முருகப் பெருமானை மனதார நினைத்து, இந்த வேலுக்கு முன்பாக ஒரு மண் அகல் தீபம் ஏற்றி

வைத்துவிட்டுப் பூஜை அறையில் அமர்ந்து கொள்ளுங்கள். உதிரிப் புஷ்பங்களால் வேலுக்கு முருகப் பெருமானை மனதார நினைத்து 'ஓம் முருகா' அல்லது உங்களுக்கு தெரிந்த முருகனின் எளிமையான நாமத்தை உச்சரித்து, அர்ச்சனை செய்ய வேண்டும். உங்களுக்கு இருக்கும் துன்பங்கள் அனைத்தும் துவம்சம் ஆக வேண்டும் என்று மனதார பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்.

எவ்வளவு பெரிய கஷ்டமாக இருந்தாலும் சரி அந்தக் கஷ்டத்தைப் படிப்படியாகக் குறைக்க கூடிய சக்தி, இந்த வேல் வழிபாட்டிற்கு உண்டு. உங்களுடைய வீட்டில் சுவற்றில் வேல் வரைய முடியாத சூழ்நிலை இருந்தால், வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்குப் பிரச்சனை இருந்தால், ஒரு வெள்ளைக் காகிதத்தில் நான்கு முனையிலும் மஞ்சள் தடவி விட்டு, நடுவே மஞ்சளால் வேல் வரைந்து, சுவற்றில் ஒட்டியும் வைத்து வழிபாடு செய்யலாம். தூய்மையான மனதும், உண்மையானப் பக்தியும்தான் நமக்கு மிக மிக அவசியம்.

நீங்கள் மஞ்சளில் வரைந்த வேல் நிறம் கொஞ்சம் மாறும்போது ஈரத்துணியில் பழைய வேலை துடைத்து எடுத்துவிட்டு மீண்டும் புதிய வேல் வரைந்து கொள்ளலாம். அதில் எந்த ஒரு தவறும் கிடையாது. பேப்பரில் வேல் வரைந்து வைத்திருந்தால், பழைய பேப்பரை நீக்கிவிட்டு, புதிய பேப்பரில் மீண்டும் புதியதாக வேல் வரைந்து மாற்றிக் கொள்ளலாம். உலகத்தைக் காக்கும் ஆயுதமான வேல் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால் அந்த வீட்டிற்கு இறை சக்தி நிறைந்த பாதுகாப்பும் இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விஷயம். நம்பிக்கை உள்ளவர்கள் அவரவர் வீட்டில் மேல் சொன்ன முறைப்படி வழிபாட்டை செய்து பலனடையலாம்.

## சில பயனுள்ள தகவல்கள்...

கோயில்கள், நதிக்கரைகள், பசுமடம், மகான்களின் சமாதி இந்த இடத்தில் தீபம் ஏற்றி வழிபட்டால், நமது தரித்திரம் விலகும். புத்தியிலும், மனத்திலும் உள்ள குழப்பங்கள் நீங்கும்.

திங்கள், புதன், வியாழன் திருமணத்தை நடத்த உகந்த நாட்கள் என்று சோதிட நூல்கள் சொல்கிறது. வெள்ளி அன்று நரசிம்மர் கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்துவிட்டு, ஒரு அம்பாள் கோயிலுக்கு சென்று தரிசனம் செய்து வந்தால் பிரிந்தவர் சேர்வர். செவ்வாய் அன்று தரிசனம் செய்து வந்தால் கடன் எளிதில் முடிய வழி கிடைக்கும். புதன் அன்று தரிசனம் செய்து வந்தால் நல்ல உத்தியோகம் அமையும். ஒரே வீட்டில் இரண்டு அடுப்பு வைத்து சமைக்கக் கூடாது. (அதாவது கூட்டுக் குடும்பமாக இருந்து சண்டை போட்டு கொண்டு, மாமியார் மருமகள் தனி தனியாக சமைப்பது அல்லது சகோதரர்கள் ஒன்றாக இருந்து சமைப்பது அல்லது பிறருடன் ஒரே வீட்டில் இருந்து கொண்டு வாழ்வது).

வீட்டில் உள்ள ஆண்கள் விளக்கு, தீபம், அடுப்பில் நெருப்பு போன்றதைப் பற்ற வைக்க கூடாது. (பெண்களின் கைகளில் அக்னி உள்ளது. இவர்கள் தான் ஏற்ற வேண்டும் என்று சோதிட நூல்கள் சொல்கிறது) (இதற்கும் தொழிலுக்கும் சம்பந்தம் கிடையாது)



# மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில்







ஈழவள நாட்டிலே, வடபாகத்தே குடாநாட்டிலே, தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கிராமத்தில் "பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் கோவில்" எனும் புண்ணிய ஸேத்திரம் அமைந்துள்ளது. தொன்று தொட்டு விளங்கும் இந்து சமய வழிபாட்டிலே தாய்த் தெய்வ வழிபாடானது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்திலே சிறப்புற்று விளங்குகின்றது. இவ் ஆலயம் பல நூற்றாண்டுகள் பழமை வாய்ந்ததாகும்.

தற்போது நாம் காணும் இடத்தில் உள்ள ஆலயம் கி.பி 1750 இல் திரு.நாகர் கதிர்காமர் என்பவரால் வைரக் கற்களைக் கொண்டு கட்டப் பெற்றதாகும். மூலஸ்தானத்தின் மேற்குப்புற வைரக் கற்சுவரில் 1750ஆம் ஆண்டு எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அமைந்திருந்த ஆலய அமைப்பிற்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

அதாவது பன்றித்தலைச்சிக் கண்ணகை அம்மன் கோவில், தற்போது



உள்ள இடத்தில் முன்னர் அமைந்திருக்கவில்லை. பழைய கோவில் தற்போதுள்ள கோவிலுக்கு வடக்குப் பக்கமாக இருந்திருக்க வேண்டும். அதற்கான செங்கற்கட்டிட இடிபாடுகள் தற்போதுள்ள ஆலயத்தின் வடக்குப் பக்கத்தில் இன்றும் காணப்படுகின்றன. அத்துடன் பிள்ளையார், கந்தசாமியார் கோவில்களும் மேற்குப்புறத்தே அமைந்திருந்தமைக்கான அடையாளங்களும் காணப்படுகின்றன.

இவ் ஆலயத்திற்கு 'பன்றித்தலைச்சி' எனும் பெயர் ஏற்பட்டதைப் பற்றிக் கர்ண பரம்பரைக்கதை ஒன்று கூறப்படுகின்றது. பண்டைக் காலத்திலே வள்ளுவ குலத்தைச் சேர்ந்த பக்தனொருவன், ஆலயத்திற்கு கிழக்கே உள்ள வடலிக் கூடலில் மாடு ஒன்றைக் கொன்றுவிட்டான். அச்சம்பவம் ஊர் மக்களுக்குத் தெரிய வந்தது. தன் தவறை உணர்ந்த பக்தன், அம்பாளை வேண்டித் தொழுதான். மறுநாள் ஊர்ப் பெரியவர்கள் முன்னிலையில் மாட்டின் தலை புதைக்கப்பட்ட இடம் தோண்டப்பட்டது. அங்கு பன்றித் தலையே காணப்பட்டது. அனைவரும் அம்பாளின் அற்புதத்தைக் கண்டுப் பேரானந்தமடைந்தனர். அன்றிலிருந்து அம்பாள் பன்றித்தலைச்சி அம்மன் என்று பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றாள்.











ஆரம்ப காலங்களில் அன்னையின் ஆலயத்தில் நிர்வாகிகளே பூஜைகளை மேற்கொண்டு வந்தனர். 1900ஆம் ஆண்டிலிருந்து பிராமணக் குருமார் பூஜைகளை ஆற்றுகின்றனர். 1939 ஆம்ஆண்டிற்கு முன்பு திங்கட் கிழமைகளில் அம்பாளுக்கு இரண்டு நேரப்பூஜையும், மற்றைய நாட்களில் அபிசேகமும் விளக்கு வைத்தலும் நடைபெற்று வந்தது. 1939இல் இரண்டு கால நித்திய பூஜை நடைமுறைப் படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் ஆசனத்தில் கும்பம் வைத்து, முகம் சாத்தி அம்மனுக்கு பூஜை நடைபெற்று வந்தது.

தர்மகர்த்தா திரு.சி.சிவகுரு அவர்கள் 1946 ஆம் அண்டில் ஐப்பசி மாதம், உத்தரட்டாதி நட்சரத்தில், கண்ணகை அம்மன் தாமிர விக்கிரகம் பிரதிஸ்டை செய்து, மகாகும்பாபிஸேகத்தைச் செய்வித்தார். அதே வருடமே மார்கழித் திருவெம்பாவை காலத்தில், வருடாந்த மகோற்வசத்தினையும் முதன் முதலாக ஆரம்பித்தார். 1950 இல் நான்கு நேர பூஜை இடம்பெற்று 1952 இல் இருந்து ஆறுகாலப் பூஜை இடம் பெறுகிறது.

பழமை வாய்ந்த கட்டிடங்கள் என்பதனால், மூலஸ்தானத்தினைப் புனரமைப்பதற்காகவும், பல்வேறு திருப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் திரு.சின்னப்பா சிவகுரு அவர்கள் 1989 இல் பாலஸ்தாபனம் செய்வித்தார். மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டும், நீராவி மண்டபம் அமைக்கப்பட்டும், ஸ்தூபி வைக்கப்பட்டும், (இதுவரை காலமும் செப்பினால் வேயப்பட்ட குடில் காணப்பட்டமை நோக்குதற்குரியது) பரிவார மூர்த்திக்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டும், 1991 இல் மகா கும்பாபிசேகம் இடம்பெற்றது. 1993 இல் அம்பாளுக்கு சித்திரத் தேர் அமைக்கும் திருப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

1999 இல் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் இடம்பெற்றது. இக்காலப்பகுதியிலே வெள்ளைக் கற்களைக் கொண்டு தேர்த் தரிப்பிடம் அமைக்கப்பட்டது. 2008 இல் இராஜ கோபுரத்திற்கான அத்திபாரம் இடப்பட்டு, வெள்ளைக் கற்களைக் கொண்டு இராஜ கோபுர கீழ்த்தளம் அமைக்கப்பட்டு, 2012 இல் திரிதள இராஜகோபுர கும்பாபிசேகம் இடம்பெற்றது. 2012இன் நடுப்பகுதியில் மணிமண்டப திருப்பணி ஆரம்பிக்கப்பட்டு 2013இல் ஒருபகுதி வேலைகள் நிறைவுற்றுள்ளது. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்பாள் ஆலயத்திலே பங்குனித்திங்கள் உற்சவம் மிகவும் பக்திப் பூர்வமாக இடம்பெற்று வருகின்றது.

'பால்குண மாதம்' என்று கூறப்படும் பங்குனி மாதத்தில் சாக்த வழிபாட்டின் சிறப்பையும், முறைகளையும் எடுத்து கூறும் சாக்த தந்திரங்கள் கண்ணகா

பரமேஸ்வரிக்குரிய தியான சுலோகங்களையும், பூஜை முறைகளையும், பிரதிஸ்டை முறைகளையும் மிகச் சிறப்பாக எடுத்து கூறுகின்றன. மட்டுவில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாளுக்குரிய மிக சிறப்பான பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வுகளும், பூசைக் கிரமங்களும் இவற்றுடன் தொடர்பு படுவதை உற்று நோக்கியறியலாம்.

மட்டுவிலில் கோவில் கொண்ட அம்மனை வேண்டித் தீவின் பல பாகத்திலுமிருந்து மக்கள் தமது நேர்த்திக் கடன்களை செய்வதற்காகவும், தரிசிப்பதற்காகவும் பங்குனித் திங்கள் உற்சவ காலத்தில் ஒன்று கூடுவர். அம்பாளின் ஆலயத்திலே உள்ள பழமை வாய்ந்த தீர்த்த கேணியிலே நீராடி, புனித நீரினை எடுத்துப் பொங்கல் செய்து, ஆலய முன்றலிலே அம்பாளை நினைத்து தாமே நிவேதித்து வணங்கும் சிறப்பு காணப்படுகிறது.

அடியவர்கள் பல பகுதிகளிலுமிருந்தும் காவடி எடுத்து, அம்பாளின் சந்நிதியில் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவர். மூர்த்திப் பெருமையும், பொங்கல் தலமாகவும், தீர்த்த விசேடமும் ஒருங்கே அமையப் பெற்ற மட்டுவில் பதி உறைகின்ற கண்ணகை அம்பாளை அடியவர்கள் மனம், வாக்கு, காயம் எனும் மூன்றினாலும் தொழுது அனுக்கிரகங்களைப் பெற வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.



# ஸ்ரீ மகாலட்சுமி வசிக்கும் இடங்கள்!

சுக முனிவர் ஒரு முறை ஸ்ரீமகாலட்சுமி தேவியிடம், "செல்வம் உட்பட சகல வளங்களையும் அருளும் தேவியே! பக்தர்களின் வீடுகளில் தாங்கள் நித்திய வாசம் செய்ய வேண்டுமெனில், மக்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டும்?" என்று கனிவுடன் கேட்டார்.

"வெள்ளை மாடப் புறாக்கள் வாழும் இடம், அடக்கமும், அமைதியும் கொண்ட பெண்கள் வாழும் இல்லம், நவதானியங்கள் நிறைந்துள்ள இடம், தானம் செய்து எல்லோருடனும் பகிர்ந்து உண்டு வாழும் நல்ல மனிதர்கள், இனிமையான சொற்களைப் பேசுபவர்கள், பணிவு நிறைந்தவர்கள், நாவை அடக்கியவர்கள், சாப்பிடுவதிலேயே நீண்ட நேரத்தைக் கழிக்காதவர்கள், பெண்களைத் தெய்வமாக மதிப்பவர்கள் போன்றவை அனைத்திலும் நான் நித்திய வாசம் செய்வேன்.

மேலும் சங்கு, நெல்லிக்காய், கோமியம், தாமரை மலர், வெண்மை நிற உடைகள், சுத்தமான ஆடைகள், சுத்தமான இல்லங்கள் இவற்றிலும் நான் வாசம் செய்கிறேன். தூய உள்ளம் கொண்டு பரிசுத்தமாக இருப்போர் அனைவரிடத்திலும் நான் நிச்சயம் இருப்பேன்!" என்று சுக முனிவருக்குப் பதில் கூறினாள் ஸ்ரீமகாலட்சுமி.

ஓம் நமசிவாய...! ஓம் நமசிவாய...!! ஓம் நமசிவாய...!!!

மாசி மகம் என்றாலே மக நட்சத்திரத்தின் தனித்துவமும், பௌர்ணமியின் செறிவும் நினைவுக்கு வரும். ஆம்! பௌர்ணமி நிலவன்று மக நட்சத்திரம் வரும் நாளில் கொண்டாடப்படும் தமிழர் நன்னாளே மாசி மகம் எனப்படும். சரி, இந்த பெயரே சொல்கிறது மாசி மாதத்தில் தோன்றும் மக நட்சத்திரத்திற்கே மாசி மகமெனப் பெயரென. இந்த மக நட்சத்திரத்தின் தனிப்பட்ட பெருமை என்ன? நீங்கள் யோசிப்பது புரிகிறது. இதோ மக நட்சத்திரத்தின் பெருமைகள் உங்கள் பார்வைக்காக.

மக நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் மன்னர்களாகப் புவி ஆள்வார்கள். மிகுந்த சக்தியும், திறனும் படைத்தவர்கள். மகம் பித்ருகளுக்கான நட்சத்திரமாகவும் கருதப்படுகிறது. பௌர்ணமி அன்று நிலவு முழுமையான தோற்றம் பெற்று, சந்திரனின் முழு சக்தியும் உடையதாய் திகழ்கிறது. இது மக்களுக்கு வளமும், நலனும் அளிக்கக் கூடிய நாளாகும். மகமும், பௌர்ணமியும் இணையும் மாசி மகம் வருடத்திற்கு ஒரு முறையே வருகிறது.

இந்த நாளில் இறைவனை வேண்டி நிற்போருக்கும். பித்ரு சேவை செய்வோருக்கும் நிறைந்த பலன்கள் கிட்டும். மாசி மகத்தன்று கோயில்களில் சிவ, பார்வதி, விஷ்ணு சிலைகளைப் புனித நீரில் நீராட்டிப் பூஜை செய்வது வழக்கம். இந்தச் சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று, புனித நீர் நிறைந்த நதியிலோ, குளத்திலோ, கடலிலோ நீராட்டிப் பூஜை செய்வது வழக்கம். (சில கோவில்களில் கஜ பூஜை அல்லது அஸ்வ பூஜை செய்வது வழக்கம்). பக்தர்கள் அந்த தெய்வங்களை நீராட்டியப் புனித நீரில் நீராடுவதால், தங்கள் பாவங்கள் தொலைந்து, புண்ணியம் தேடிக் கொள்கிறார்கள். பிறவிப் பிணியிலிருந்து விடுபடுவார்கள். இறை அருள் பெறுவார்கள்.

இந்த நாளில் பார்வதிக்குக் குங்கும அர்ச்சனை செய்வது விசேஷ பலன்கள் கொடுக்கும். ஏதாவது ஒரு தீர்த்தத்தில் நீரடினாலே இந்த நாளில் நற்பலன்கள் கிட்டும். மாசி மகம் பித்ரு சேவைக்கு உகந்த நாள். மாசி மகம் அன்று பித்ருக்கள் பூமிக்கு வந்து, தங்கள் கர்மாக்களைத் தொலைப்பதாகக் கூறப்படுகிறது. அன்று பித்ரு தர்ப்பணம்





செய்தால் அவர்களின் ஆசியும், தொடர்ந்து வந்து படுத்தும் வினைகளுக்குத் தீர்வும் கிடைக்கும். இந்த நாளில் அன்னதானம் செய்வது நல்லது.

வல்லாளர் என்பவர் திருவண்ணாலையில் அரசாண்டு வந்தார். குழந்தை இல்லாத அவர் முன் எம்பெருமானாம் சிவன் ஒரு பாலகனாகத் தோன்றி, அவர் இறக்கும் தருவாயில் அவர்தம் ஈமச் சடங்குகளைச் செய்வதாக வாக்களித்தார். அவ்வாறே அந்த அரசர் இறந்த அன்று, சிவ பெருமான் அவரின் ஈமச் சடங்குகளைச் செய்ததாகப் புராணம் கூறுகிறது. இன்று கூட மாசி மகம் அன்று சிவ பெருமான் பூமிக்கு வந்து, அந்த அரசருக்கு உரிய சடங்குகளைச் செய்வதாகக் கருதப்படுகிறது.

மாசி மகத்தை பற்றி மற்றுமொரு புராணக் குறிப்புமுண்டு. எம்பெருமான் சிவனார் உலகத்தை அழித்து, மீண்டும் உருவாக்கத் திட்டமிடுவதை உணர்ந்த பிரம்மன், அவரிடம் 'மீண்டும் உலகத்தை உருவாக்குவது எப்படி?' எனக் கேட்டார். சிவனும் ஒரு கும்பத்தில் அமிர்தத்தை நிரப்பி, அதை மேரு மலையின் உச்சியில் வைக்கப் பணித்தார். பிரளயத்திற்குப் பிறகு, உலகம் அழிந்த நிலையில், மீண்டும் அதனை உருவாக்க அந்த அமிர்த கலசத்தை வைத்த இடத்திலிருந்து உபயோகிக்கக் கூறினார். பிரமனும் அப்படியே செய்தார். இது நடந்த தினம் மாசி மகம்.

ஆம்! பிரமன் மாசி மாதத்தில் மக நட்சத்திரம் தோன்றிய அன்றே உலகை உருவாக்கினார். அந்த இடம் கும்பகோணம் எனப் பெயர் பெற்றது. இந்த நாளில் சிவனாரின் சக்தி முழுமையாக அண்டம் முழுவதும் வியாபித்து இருக்கும். என்னப்பன் கந்தனாம் முருகவேள் தனது தகப்பனுக்கு உபதேசம் அளித்த திருநாளும் இதே. மாசி மகத்தன்றே அன்னை பார்வதி தக்ஷனின் மகள் தாக்ஷாயணியாக அவதரித்தாள். எனவே பெண்டிர் இந்த நாளை விரதத்திற்கு உகந்ததாகக் கருதி, அம்மனுக்குப் பூஜை செய்து புண்ணியம் தேடுகிறார்கள். பகவான் விஷ்ணு பூமியைப் பாதாளத்திலிருந்து எடுத்து வந்த வராஹ அவதாரத் திருநாளும் இதே.

மஹா மகம் என்பது 12 வருடங்களுக்கு ஒரு முறை வருவது. இது தெற்கு இந்தியாவின் கும்ப மேளாவாகக் கொண்டாடப்படுகிறது. இந்தத் திருநாள் கும்பகோணத்தில் உள்ள ஆதி கும்பேஸ்வரர் கோவிலில் உள்ள மஹாமக குளத்தில் அருமையாகக் கொண்டாடப்படுகிறது. லட்சக்கணக்கான பக்தர்கள் இந்த குளத்தில் ஸ்நானம் செய்வதைப் பாக்யமாகக் கருதுகிறார்கள்.

மாசி மகம் தமிழர் திருநாள். மாசி மகம் தமிழ் பேசும் நல்லுலகம் உலகின் எந்தெந்த மூலைகளில் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களாலும் கொண்டாடப்படுவது. கும்பகோணம், ஸ்ரீரங்கம், பாண்டிச்சேரி போன்ற இடங்களில் சிறப்பாகக் கொண்டாப்படுகிறது. சிங்கப்பூரிலும் கொண்டாடப்படுகிறது. இப்படியாக மாசி மகம் நம் இன்னல்களை விடுவித்து நன்மைகளை அளிக்கிறது. புண்ணியத்தைத் தேடிக் கொடுக்கிறது.

# அறிவோம் ஆன்மீகம்

## பாகம்-20

# தமிழரும் தை மாதமும்



‘தைப் பிறந்தால் வழி பிறக்கும்’ என்கிற தத்துவப் பொருள் நிறைந்த சொல்லாடல் மூலம், தமிழர் வாழ்வில் தை மாதம் என்பது ஒளி சிந்தும், இன்பம் பொங்கும் வாழ்வின் தொடக்க நாளாகத் திகழ்வதை நாம் காண்கிறோம். இதில் ஆன்மீகம் எங்கே வருகிறது? எனத் திராவிட அரசியல் பகுத்தறிவு வாதச் சிந்தனையாளர்கள் கேட்கலாம், கேட்டும் வருகிறார்கள்.

அவர்களின் அரசியல் தை மாதத்தின் தமிழரின் பாரம்பரிய கலாச்சார மத நம்பிக்கைகளை அழிக்கத் தேவைப்படுகிறது என்றால், தமிழரின் தை மாதம் தொடர்பான சகல பண்பாட்டு விழுமியங்களைத் தேடித் தெரிந்து பாதுகாக்க வேண்டிய தேவையை, 2009 இல் தமிழ் இன அழிப்புப் போரின் முடிவுகளும், அதன் பின்னர் இலங்கை இந்திய சர்வதேச அரசுகளின் செயல்களும் எமக்குப் பாடமாகப் பார்க்கப்பட வேண்டியவை.

அப்படிப் பார்க்க நாம் தவறினால், எப்படி எம்மின அழிப்புப் பொறிக்குள் எமது 70 வருட அரசியலும், அரசியல் தலைவர்களும் சிக்க வைக்கப்பட்டு, எம் இனத்தின் தேசிய அரசியல் எழுச்சியை முழுமையாக அழிக்கப்பட்டோம்? என்கிற உண்மையும் தெரியாமல் போய்விடும். கண் இருந்தும் எம் இனம் குருடாகி எப்படிப் பலியானது? என்பதை அறிய வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் உலகத் தமிழ் இனம் இன்று உள்ளது. நாம் இனியும் ஈழத் தமிழன், இந்தியத் தமிழன், இலண்டன் தமிழன், இத்தாலியத் தமிழன் என்ற பிரிவினைகளுக்குள் அடக்கப்பட்டு, அழிக்கப்பட இடமளிக்கக் கூடாது.

எமது இனத்தின் அரசியல் போராட்டம், யாழ்ப்பாண உயர் சாதி வேளாளத் தமிழரின் பயங்கரவாதம் எனக் கட்டம் கட்டி அழிக்கப் பட்டது. இத்தகைய பொய்ப் பிரச்சாரத்தை எதிர்காலத்திலும் இடம் பெறாமல் செய்யவும், போரினால் உலகம் எங்கும் சிதறிக் கிடக்கும் நாம், உலகத் தமிழர் என்கிற பொதுமைக்குள் எல்லா நாட்டுத் தமிழர்களையும் இணைக்கும் அமைப்பாக, உலக நாடுகளின் அரசியல் அரங்குகளில் எமது உரிமைக் குரலை ஒலிக்கச் செய்ய வேண்டும்.





தை மாதம் என்றாலே, தைப் பூச நட்சத்திரமும் அன்று உலகம் முழுவதுமுள்ள தமிழர்கள் கொண்டாடும் முருக வழிபாடும் மறைக்கவோ, மறுக்கவோ முடியத அளவுக்குப் பிரபலமானவை.

அதனால் தை மாதமும், அதன் அரசியல் ஆன்மீகத் தத்துவங்களும் தமிழ்த் தேசியத்தை எதிர்க்கிறோம் என்கிற ஒற்றை அரசியல் காரணத்துக்காகத் திராவிட அரசியலுக்குள் புகுத்தி, புது விளக்கம் கொடுத்து திராவிடரின் புது வருடப் பிறப்பு எனப் பொய் உரைத்து செய்த தி.மு.க. தலைவர் கருணாநிதி செய்த மோசடி அரசியலை நம்பிய தேசியத் தலைவரும், தமிழரின் புது வருடம் சித்திரை அல்ல, தை மாதமே என மாற்றியதை ஒரு துன்பியலாகக் கருதி, உலகத் தமிழர் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கொண்டாடி வந்த சித்திரை முதல் நாளைத் தமிழர்களின் புதுவருடமாகவும், தை முதல் நாளைத் தமிழர்களின் கலாச்சார மாதமாகவும் ஏற்றுக் கொண்டாட வேண்டும்.

அடுத்து, தை மாதம் எப்படித் தமிழரின் ஆன்மீகத்துள் அடங்குகிறது என்பதையும் பார்ப்போம்.மேற்குலக மக்களும், மதங்களும், விஞ்ஞானிகளும் பூமி தட்டையானது, சூரியன் பூமியைச் சுற்றி வருகிறது என்கிற நம்பிக்கையில் இருந்த காலத்திலேயே தமிழர் நாம் ,பூமியும் ஏனைய கோள்களும் தட்டைஅல்ல, உருண்டை வடிவானவை என்றும் சூரியனைச் சுற்றி ஏனைய கோள்களும், பூமியும் வருவதால் நாளும், வாரமும், மாதமும், வருடங்களும், பருவ நிலைகளும் நிகழ்கின்றன என வகுத்தும், பகுத்தும் கோயில்களில் சிற்பங்களாக வடித்தும் வழிபட்டு வந்துள்ளனர். அப்படித்தான் தமிழரின் சித்திரை மாதமும், புது வருடங்களும், ஆன்மீக வழிபாடுகளாகத் தமிழர் வரலாற்றில் நீங்கா இடம் பெற்றன.

சூரியன் பூமத்திய ரேகைக்கு வடக்கில் 6 மாத காலம் நின்ற காரணத்தால், பூமத்திய ரேகைப் பகுதியைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்கள் ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்களில் மழை வாடைக் காற்று மற்றும் பனிக்காலக் குளிர் என்பவற்றால் அவதி உற்ற நிலையைப் போக்கும் வகையில், சூரியன் தை மாத முதல் நாளில் பூ மத்திய ரேகைக் கோட்டைக் கடந்து, தெற்கில் அடுத்த 6 மாதங்கள் நிற்பதால், தமிழர் பகுதிகள் இதமான வெப்பதட்ப




நிலையிலும், பயிர்களின் அறுவடையால் கிடைத்த அறுசுவைப் பழங்கள், தின பண்டங்களால் அகமும், புறமும் அளவற்ற இன்பத்தில் திளைக்கும் காலத்தைத் தை மாதம் தருவதால், எல்லாருக்கும் வழியைக் கொடுக்கும் மாதமாக தை மாதம் விளங்குகிறது.

பல்லாயிரம் ஆண்டுகளாகத் தமிழரின் கலாச்சாரத் தொகுப்பாக தை மாதம் இருந்துள்ளதை சங்க இலக்கியங்கள் வாயிலாக நம்மால் அறிய முடிகிறது. மனித குலத்தின் வேட்டைக் கால வாழ்க்கை மாறி, மேய்ச்சல் சமுதாயமாக மாறிய பொழுதே, மாடுகளைப் போற்றும் விழாக்களான ஏறு தழுவுதல் எனப்படும் ஜல்லிக்கட்டு, தை முதல் நாளில் சூரியப் பொங்கலும், மறுநாளில் மாடுகளைப் போற்றி வணங்கும் பொங்கலும், மாட்டு வண்டிச் சவாரிகளும், மக்கள் ஆடல் பாடல்களில் களிக்க வைப்பதால் தை மாதம் தமிழரின் கலாச்சாரங்களின் தொகுப்பு மாதம் என்றால் என்ன தவறு?

தமிழனுக்குப் பெருமை தரும் இந்த உண்மையை உலகறியப் பிரகடனப் படுத்திய கனேடிய அரசையும், அதற்காக உழைத்த அனைத்து நல் இதயங்களையும் அகரதீபம் உலகத் தமிழர் சார்பாக இரு கரம் கூப்பி வணங்கி மகிழ்கிறது.

# சமமான மன நிலை ஞானமே மதத்தின் வழி

## (காஞ்சி மஹா பெரியவர்)



துன்பத்தைப் பற்றி வருந்திக் கொண்டிருப்பது மதத்தின் வழியாகாது. நாம் சங்கடமான நிலைமையில் இருக்கும் போது, தீய எண்ணங்கள் நம் மனதில் புகாமல் இருக்க, பிராத்தனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் சமாளிக்கும் திறமை வலுப்பெற்று துன்பமே அர்த்தமற்றதாகி விடும். அத்தகைய நோக்கு ஞானத்தில் பிறப்பதாகும். ஒவ்வொருவரும் தத்தம் முயற்சியாலேயே ஞானத்தை அடைய வேண்டும். ஆகவேதான், நம் மதம் தனி மனிதனை அடிப்படையாகக் கொண்டது. நம்மைச் சேர்ந்த, நாம் செய்யும் ஒவ்வொன்றையும் ஆண்டவனுக்கு அர்ப்பணித்து விட்டால் சுக துக்கங்களால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சமமான மன நிலையை நாம் பெறலாம்.

மந்திரமாம் திருநீர் பூசி நம் மனதினிலேயவரை வைக்க, விந்தைகளை அவர் புரிந்திருப்பார். வினைகளை அறுத்திருப்பார். கடலாடி அமுதம் கடைந்து அமரரைக் காத்து நின்ற கருவண்ணன் உருவான குருவவரே! எப்போதும் மலர்ச்சியான உம் முகம் காணத் தவமிருக்கும் மக்கள் கூட்டம்!! பூவில் நிறைந்த தேனினையே நுகரக் காத்திருக்கும் தேனீக்களைப் போல், உம் நிறைந்த ஞானத்தையே பருகக் காத்திருக்கும் பக்தர் தம் கூட்டம்!!.. வேதத்தின் நாயகனாம், மாதவமாம், மாமணியாம் ஆதவனின் கதிரொளியாம் ஆன்மீக குருவவரே! சோகங்கள் தீர்த்திடுவார், சுகங்கள் சேர்த்திடுவார்.

உலகிலுள்ள உயிரனைத்தும் படைக்கின்ற முதலான ப்ரஹ்ம ஸ்வரூபமாய் வந்துதித்த குருவவரே! எங்கெங்கும் பரவும் மகரந்தம் போல் பாரெங்கும் பரவி நிற்குது உம் புகழ்!! சிவனே என்றழைக்க சிவனென்று சிவமாய் துணை நிற்கும் குருவே! ஹரனே என்றழைக்க அரணாக காத்து நிற்கும் ஹரியும் நீரே! அருளாளன் நீரே! பிரமமாய் உம்மை ஏற்று பிரமத்தில் பூஜிக்க பிரம்மமே நீரும் வந்தருள் குருவாகி திருவாகி குறை தீர்க்கும் அருளாகி குணம் தந்து எம்மை காத்து அமைதியை தந்திடும் உம் அதிஷ்டானமே! அருளைப் பொழிந்திடும் தலமே! ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர !!!!

# கடவுள் இருப்பதை உணர்வது எப்படி?

கடவுளிடம் பக்தி கொண்ட ஒருவர், தான் கடவுளை உணரமுடியாததால் அது குறித்து கேட்க ஒரு மகானிடம் சென்றார். ‘கடவுள் எங்கு இருப்பார்? எப்படி இருப்பார்? அவரை உணர்வது எப்படி?’ என்று அந்த மகானிடம் அவர் கேட்டார். அதற்கு அந்த மகான், “கடவுள் எல்லா இடங்களிலும் இருக்கிறார். சர்வ ஞானமும் பெற்ற, அழியாத, பேரின்பம் நிறைந்த வடிவம் தான் கடவுள். நீயும் கடவுள் தான்” என்றார்.

அதற்கு பக்தர், “அப்படியானால் ஏன் என்னால் உணர முடியவில்லை?” என்று வினவினார்.

அதற்கு அந்த மகான் மிக அழகாக, “உன் எண்ணங்களில் அவர் இருக்கிறார். ஆனால், உன் எண்ணம் உலகத்தில் நடக்கும் விஷயங்களில் சூழ்ந்திருப்பதால் அவரை உணர முடியவில்லை” என்று பதிலளித்தார்.

இப்படி பல வழிகளில் அந்த மகான் உண்மையைப் புரிய வைக்க முயன்றார். ஆனால் அந்த பக்தரோ அதைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார். இறுதியாக அந்த பக்தரை ஹரித்வாருக்குச் செல்லும்படி அந்த மகான் கூறினார். ‘அங்குள்ள கங்கை நதியில் ஒரு அபூர்வமான வண்ணத்தைக் கொண்ட ஒரு மீன் இருக்கின்றது’ என்றும் சொன்னார். மேலும், ‘மனிதர்கள் போலவே பேசும் குரல் அதற்கு இருப்பதால், உன் கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்’ என்றும் சொன்னார்.

உடனடியாக மகானின் பாதங்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்று ஹரித்வாருக்குப் புறப்பட்டார். அபூர்வமான மீனின் வருகைக்குக் காத்துக் கொண்டிருந்தார். அந்த சமயம், “கடவுள் எங்கு இருக்கிறார்? எப்படி அவரை உணர முடியும்?” என்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தார். சிறிது நேரத்திற்குப் பிறகு அந்த மீன் அங்கு வந்து, “எங்கிருந்து வந்திருக்காய்?” என்று கேட்டது.

அதற்கு அந்த பக்தர், “மகான் ஒருவர் உன்னிடமிருந்து கடவுளைப் பற்றித் தெரிந்து கொள்ள அனுப்பி வைத்தார்” என்று கூறினார்.

அதற்கு அந்த மீன், “எனக்கு ஏழு நாட்களாக ஒரே தாகம். எங்கு தண்ணீர் கிடைக்கும்?” என்று கேட்டது.

அதற்கு பக்தர், “பைத்தியக்கார மீனே, வலது, இடது, மேலே, கீழே என்று எல்லாப் பக்கங்களிலும் தண்ணீர் தானே” என்று பதிலளித்தார்.

உடனே மீன் கொஞ்சம் கடுமையாக, “நீ தேடிக் கொண்டிருக்கும் கடவுளும் அப்படிதான். எல்லா பக்கங்களிலும் இருக்கிறார்” என்று மிக அழகாகக் கூறலாயிற்று.

அந்தப் பதிலைக் கேட்டுத் திருப்தி அடைந்த போதிலும், ஒரு சந்தேகத்தை முன் வைத்தார், “அப்படியானால் கடவுளை உணர முடியாமல் ஏன் இப்படித் தவிக்கின்றேன்?”

அதற்கு அந்த மீன், “இதே கேள்வி தான் எனக்கும். தண்ணீரால் சூழ்ந்திருக்கும் எனக்கு ஏன் தாகம் தணியவில்லை என்பது தான்”.

மீனின் வடிவமைப்பு குறித்து அந்த பக்தன் நன்கு அறிந்திருந்தான். ஆகையால் மீன் எப்படி நீந்தினால் அதன் வாயில் தண்ணீர் சென்று, அதன் தாகம் தணியும் என்பதை அவன் மீனிற்கு எடுத்துரைத்தான்.

உடனே மீன், “எப்படி நீந்தினால் என் தாகம் தணியும் என்று நீங்கள் கூறியது போல , கடவுளை உணர நீங்கள் முயற்சி செய்தால் நீங்கள் கடவுளை உணரலாம். ஆசைகளைத் திசை திருப்பி, கடவுளின் மேல் செலுத்த வேண்டும். உலக விஷயங்கள் மேல் இருக்கும் எண்ணங்களைக் கடவுள் மேல் திருப்பினால் கவலைகளுக்குத் தீர்வு கிடைக்கும்”. பக்தரும் அப்படியே செய்து உண்மையைப் புரிந்து கொண்டார்.

**நீதி : கடவுளை அடைய வேண்டும் என்றால் எண்ணங்களை அவர் மீது செலுத்த வேண்டும். எல்லாப் படைப்புகளிலும் அவரை உணர்ந்து வாழ வேண்டும்.**



# மகிமை மிகு திருநீறு



'பாழ்' என்பது ஔவை வாக்கு. திருநீற்றின் பெருமை சொல்லவே உருவானது திருஞானசம்பந்தரின் 'திருநீற்றுப் பதிகம்'. மந்திரச் சொற்களுக்கு நிகரானது திருநீறு. சைவ சமயத்தவரின் அடையாளமாக மட்டுமல்லாமல், தெய்வீக ஆற்றல் தரும் புனிதச் சின்னமாகவே திருநீறு போற்றப்படுகிறது. பிறப்பெடுக்கும் எவரும் முடிவில் பிடி சாம்பலாகத்தான் வேண்டும் என்பதால், எதிலும் அளவுக்கு அதிகமான ஆசை வைக்காமல் இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை உணர்த்துவதுதான் திருநீறு.

'நீறு' என்றால் சாம்பல்; 'திருநீறு' என்றால் மகிமை பொருந்திய நீறு என்று பொருள். திருநீறு 'விபூதி' என்றும் அழைக்கப்படும். விபூதி என்றால் ஞானம், ஐஸ்வர்யம் என்றெல்லாம் பொருள் தரும். 'பிறப்பு, இறப்பு என்னும் கொடுமையானப் பிறவிச் சுழலிலிருந்து விடுவித்து, ஈசனின் திருவடிகளில் நம்மைக் கொண்டு சேர்க்கும் மாமருந்து திருநீறு' என்று போற்றுகிறது திருஞானசம்பந்தரின் திருநீற்றுப் பதிகம்.

அளவற்ற மகிமைகள் கொண்ட திருநீற்றின் மகிமைகள், வகைகள், பயன்படுத்தும் முறைகள், இடங்கள் மற்றும் கால நேரங்கள் பற்றி அறிந்து கொள்ளலாமே...

சைவ சித்தாந்தம் கூறியபடி திருநீறு நான்கு வகைப்படும். அவை கல்பம், அணுகல்பம், உபகல்பம், அகல்பம் என்பன. கன்றுடன் கூடிய ஆரோக்கியமான பசுவின் சாணத்தை பிரம்ம மந்திரம் சொல்லி சிவாக்னியில் எரித்து உருவாக்குவது கல்பத் திருநீறு. காடுகளில் மேயும் பசுக்களின் சாணங்களைக் கொண்டு எரித்து செய்வது அணுகல்பத் திருநீறு. தொழுவங்களிலிருந்து எடுத்த சாணத்தைத் தீயில் எரித்து, அதிலிருந்து பெறப்படுவது உபகல்பத் திருநீறு. இதுவே நாம் பயன்படுத்தும் திருநீறு. தரையில் விழுந்து கிடக்கும் சாணங்களை எடுத்துத் தயாரிக்கும் திருநீறு அகல்பம்.

'சாம்பலாகி வரும் திருநீறு மும்மலங்களையும் சாம்பலாக்கும்' என்கிறது தேவாரம். மனித உடலில் நெற்றி ஒரு முக்கியமான ஸ்தானம். புருவ மத்தியை வசியப்படுத்தி பல வகை சித்துகளைச் செய்ய முடியும் என்பது ஞானியர் வாக்கு. நெற்றியின் மையத்தைக் காப்பதற்கே விபூதி அணியப்படுகிறது. ஆக்ஞா, விசுத்தி சக்கரங்களைப் பாதுகாத்து, ஆன்ம ஒளியைப் பெருக்குவது விபூதி. பிட்யூட்டரி சுரப்பியைத் தூண்டச் செய்யும் நெற்றியைச் சீர்படுத்தவும்,

சூரியக் கதிர்களின் சக்திகளை நெற்றி வழியாக உள்ளே செலுத்தவும் திருநீறு பயன்படுகிறது என்றும் சொல்லப்படுகிறது.

விபூதி சிறந்த கிருமி நாசினி என்றும், அதனால் பல நோய்களை வராமல் தடுக்க முடியும் என்றும் சொல்லப்படுகிறது. விபூதியை, ஜபம், மந்திரித்தல், யந்திரங்கள், மருத்துவம் எனப் பல்வேறு பணிகளுக்காகப் பயன்படுத்திய விதத்தை அகத்திய மாமுனி 'அகத்தியர் பரிபூரணம்' என்ற நூலில் விளக்கியிருக்கிறார். இதைப் படிப்பவர்கள் விபூதியைத் தவிர்க்கவே மாட்டார்கள் என்று உறுதியாகச் சொல்லலாம்.

## விபூதியைத் தரித்துக் கொள்ளும் முறைகளும் பெயர்களும்...

அப்படியே அள்ளி நெற்றியிலும் அங்கத்திலும் பூசிக்கொள்ளும் முறை 'உள் தூளனம்.' ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல் என மூன்று விரலால் இடைவெளி விட்டு மூன்று கோடுகளாக விபூதியைத் தரித்துக்கொள்ளும் முறை திரிபுண்டரீகம். திருநீற்றை மோதிர விரலால் எடுப்பதுதான் சிறந்தது. நம் உடலில் பவித்ரமான பாகம் என்று அதுதான் கூறப்படுகிறது. வடக்கு அல்லது கிழக்கு திசை நோக்கி நின்று, விபூதியை எடுத்து கீழே சிந்தாமல், வலது கையின் ஆட்காட்டி விரல், நடுவிரல், மோதிரவிரல் ஆகியவற்றால் எடுத்து அண்ணாந்து, நெற்றியில் பூச வேண்டும். 'திருச்சிற்றம்பலம்', 'சிவாயநம:' அல்லது 'சிவ சிவ' என்று சொல்லி அணிந்துகொள்ள வேண்டும்.

காலை, மாலை, மற்றும் இரவு படுக்கப் போகும் போதும், வெளியே கிளம்பும் போதும் திருநீறு தரிக்க வேண்டும். நடந்து கொண்டும், படுத்துக் கொண்டும் விபூதி தரிக்கவே கூடாது. ஸ்வாமி முன்பும், குரு முன்பும், சிவனடியார் முன்பும் முகத்தைத் திருப்பி நின்று விபூதி அணிய வேண்டும்.

தலை நடுவில், நெற்றி, மார்பு நடுவில், தொப்புள் மேல், இடது தோள், வலது தோள், இடது கை நடுவில், வலது கை நடுவில், இடது வலது மணிக்கட்டுகள், இடது வலது இடுப்பு, இடது வலது கால் நடுவில், முதுகுக்குக் கீழ், கழுத்து, வலது காதில் ஒரு பொட்டு, இடது காதில் ஒரு பொட்டு என மொத்தம் 18 இடங்களில் திருநீறு அணியலாம் என்று சைவ ஆகமங்கள் கூறுகின்றன.

ஒவ்வோர் இடத்தில் பூசும்போதும் ஒவ்வொரு வகையான பலன்களைப் பெறலாம். 'திருநீற்றைக் கொடுப்பவர் செய்த தவப் பயன் மற்றும் பூஜா பலன்கள் அதை வாங்குவோருக்கும் போய்ச் சேர்ந்துவிடும். எனவே, தியானத்தில் சிறந்த உயர் நலன்கள் உள்ளவர்களிடம் மட்டுமே விபூதியைப் பெற வேண்டும்' என்கிறார் அகத்தியர். 'லும் றீம் சிம்ரா' என்று சொல்லி பெரியவர்களிடம் திருநீறு வாங்கினால் அவர்களின் பரிபூரண ஆசியைப் பெறலாம் என்றும் கூறுகிறார்.

திருநீறு ஆன்மிக பலத்துக்கு மட்டுமல்ல, ஆரோக்கிய நலத்துக்கும் உகந்தது என்கிறது நவீன அறிவியல். 'மகிமை என்ற பொருளைக் கொண்ட விபூதியின் ஆற்றல், சிவனுக்கு நிகரானது' என்கிறது திருஞான சம்பந்தரின் தேவாரம். தேவர்களும், ஞானிகளும் போற்றிய திருநீற்றை அணிந்து நாளும் வளமோடு வாழ்வோம்!



# செல்வம் ஈர்க்கும் குங்கிலியம்

குங்கிலிய மரங்களிலிருந்து இரப்பர், பால் போல வடியும் ஒரு பிசினே வீடுகளில் நாம் உபயோகிக்கும் சாம்பிராணி. இறை வழிபாடுகளில் மத பாகுபாடு கடந்து, அனைத்து மதங்களிலும் சாம்பிராணி புகை இடம் பெறுகிறது.

குங்கிலியப் புகையே! அக்காலங்களில் அரசர்கள், பெரும்செல்வந்தர்கள் இருப்பிடங்களில், வாசனைப் புகையாகவும், கொடிய நச்சுக்களைப் போக்கக் கூடியவையாகவும் பயன்பட்டன. குங்கிலியத் தூளை நெருப்பில் போட்டுப் புகைக்க, வீட்டிலுள்ள விஷ காற்று சுத்தப்படும்.

முன்னோர் கூறியவை எல்லாம் சுத்த பட்டிக்காட்டுத்தனம் என்று சொல்லி, இன்று பல்வேறு வழிகளில் இயற்கையை விட்டு விலகி, நம் வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டோம். இயற்கை குங்கிலியம் எதற்கு? என்ற மகத்துவம் அறியாமல் அதை விலக்கி, செயற்கையாகக் கிடைக்கும் சாம்பிராணி வில்லைகளை வாங்கி, நாமும் சாம்பிராணிப் புகையை வீடுகளில் போட்டுக் கொண்டு நம்மை நாமே, ஏமாற்றிக் கொள்கிறோம்.

'தூபக்கால்' எனும் சாம்பிராணி காட்டும் பாத்திரத்தில், தேங்காய் ஓடுகளை எரித்து, அதில் நெருப்பை உண்டாக்கி, அதில் சுத்த குங்கிலியம் பொடியாக்கி தூவ, வீடுகளில் தெய்வீக நறுமணம் உண்டாகும். இந்த சாம்பிராணி புகையை வீடுகளில் உள்ள பூஜையறையில் காட்டி விட்டு பின்னர் வீடு முழுவதும் ஒவ்வொன்றாக வரவேற்பறை, சமையலறை மற்றும் படுக்கையறை உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் சாம்பிராணி புகையைக் காட்டி வருவர்.

அக்காலங்களில், குழந்தைகள் அனைவரும் வாரமொருமுறை எண்ணை தேய்த்துக் குளித்து வந்ததும், தலைக்குச் சாம்பிராணி புகை போடுவர். பெண்களும் குளித்து வந்ததும் சாம்பிராணி புகையைச் சுவாசித்து, தலையிலும் காட்டிக்கொள்வர். ஏன், என்ன காரணம்? முன்னோர் செயலில் எதற்கும் ஒரு விளக்கம் இருக்கும்.

பெண்களின் கருபப்பைச் சார்ந்த அனைத்து பாதிப்புகளையும் சரி செய்வதுடன், சாம்பிராணி புகையைச் சுவாசிக்க, அது உடலில் உள்ள இராஜ உறுப்புகள் அனைத்தையும் எந்த வியாதியும் அணுகாமல் காத்து வரும். மேலும், தலைக்கு சாம்பிராணி புகையைக் காட்டி வர, தலை முடி கருமையாக வளர்ந்து நரைகள் இல்லாமல் ஆண்கள், பெண்கள் அனைவரும் நலமுடன் வாழ்ந்தன.

தற்போதைய ஆய்வுகளில் குங்கிலிய சாம்பிராணி மரப் பிசின்களில் உள்ள வேதிப்பொருட்கள், புற்று வியாதிகளைச் சரியாக்கக்கூடிய மருத்துவ தன்மை மிக்கவை என ஆய்வாளர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.

இதையே தானே நம் முன்னோர் அன்றே கூறி, எண்ணை தேய்த்துக் குளிக்கும் மனிதர்கள் அனைவருக்கும் மற்றும் வீடுகளில் வாரமிருமுறையும் சாம்பிராணி புகைக்கச் சொல்லி, அறிவுறுத்தி வந்தனர்.

சாம்பிராணி புகை நச்சுக்கிருமிகளை அழிக்கும் ஆற்றல் மிக்கது, எனவே, வீடுகளில் நாம் பயன்படுத்தும் எல்லா இடங்களிலும் சாம்பிராணி புகையிட்டு வர, கிருமிகள் விலகி விடும். வீட்டில் உள்ளவர்களுக்கும் எந்த பாதிப்புகளும்



நேராது என்ற எண்ணத்திலேயே வீடுகளில் சாம்பிராணி புகை இட்டனர்.

வீடுகளில் வாரமிருமுறை சாம்பிராணி புகையை இட்டு வர, நச்சுக்கள் எல்லாம் விலகி விடும். இப்போது நாம் உபயோகிக்கும் செயற்கை சாம்பிராணிகளால் பலன் ஏதுமில்லை. மாறாக, அவற்றின் செயற்கைத் தன்மை சிலருக்கு ஒவ்வாமையை உண்டாக்கி விடலாம்.

மழைக்காலங்களில் வீடுகளில் சாம்பிராணியுடன் வேப்பிலை சருகு, நொச்சி இலை சருகு இவற்றைச் சேர்த்து படுக்கை அறைகளில் புகை இட்டு வர, மழைக்கால வியாதிகளைப் பரப்பும் கொசுக்கள் எல்லாம் நொடியில் ஓடி விடும். இரவில் கொசுக்கடி இல்லாத, சுகமான உறக்கத்தை அனுபவிக்கலாம்.

சளித் தொந்தரவு, தலைவலி, அதிகத் தும்மல், பொடுகு, பேன் தொல்லை, தலைமுடி உதிர்தல், மூக்கில் நீர்வடிதல், கேச நோய்கள் போன்ற தொந்தரவுகளிலிருந்து நிவாரணம் பெறலாம்.

தலைக்குக் குளித்த பின்னர் கூந்தலை உலர்த்தவேண்டியது மிக அவசியம். சரியாக உலர்த்தாவிட்டால் தலையில் நீர் கோர்த்தல், தலைபாரம், சளி, தலைசுற்றல் போன்றவை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

ஆண், பெண், குழந்தைகள், முதியவர்கள் என வயது வரம்பின்றி அனைவரும் தூபம் போட்டுக்கொள்ளலாம். ஆஸ்துமா, மூச்சடைப்பு உள்ளவர்கள் தவிர்ப்பது நல்லது. இதை எடுத்துக்கொள்ள விரும்புபவர்கள் மருத்துவர்களிடம் ஆலோசனை பெறுவது முக்கியம். குங்கிலியம் பொடியைத் தினந்தோறும் வீடு, தொழில் செய்யும் இடத்தில் புகை காட்டினால் கெட்ட சக்திகள் விலகி, நல்ல சக்திகள் உருவாகும். செல்வ செழிப்பு உண்டாகும். தொழில் செய்யும் இடத்தில் மக்கள் வரவு அதிகம் ஆகும், வியாபாரம் பெருகும்.



# பங்குனி உத்திர வரலாறு

பங்குனி மாதம் உத்திர நட்சத்திரம் வரும் நாள், பங்குனி உத்திரமாகக் கொண்டாடப்படுகிறது. இம்மாதத்தில் தான் அசுரர்களின் கொட்டத்தை அடக்க முருகப் பெருமான், தன் தாய், தந்தையரை வணங்கிப் பயணத்தை ஆரம்பித்தார். குதிரைகள் பூட்டிய தேரில் முருகப் பெருமானுக்கு வாயு பகவான் சாரதியாக இருக்க, முருகனின் படைகள் அணிவகுத்துச் சென்றன. அப்போது, வழியில் ஒரு சிறிய மலை முருகனின் படைகளை வழி மறிக்கும் விதமாகப் பெரிதாக வளர ஆரம்பித்தது. காரணம் அறியாது அனைவரும் திகைத்து நிற்க, அங்கிருந்த நாரதர் அம்மலையைப் பற்றி சொல்லத் தொடங்கினார்.

இந்த மலை கிரவுஞ்சன் என்னும் அசுரனாக இருந்து, எல்லோருக்கும் தீமைகளைப் புரிந்த தீய சக்தி ஆகும். அகத்திய முனிவரின் சாபத்தால், அசையாமல் மலையாகி நின்றாலும், இருந்த இடத்தில் இருந்து கொண்டே தன்னைக் கடந்து செல்பவர்களை ஏமாற்றித் தொல்லை தந்து கொண்டிருக்கிறது என்றார். மேலும், இந்த மலைக்கு அருகில் உள்ள மாயாபுரிப் பட்டினம் என்னும் நகரில், சூரபத்மனின் தம்பியும், யானை முகம் கொண்டவனுமான தாரகாசுரன் ஆட்சி செய்து கொண்டு, தேவர்களை மிகுந்த துன்பங்களுக்கு உள்ளாக்கி வருகின்றான் என்ற தகவலையும் சொன்னார்.

அதை கேட்ட முருகப்பெருமான், தன் தளபதி வீரபாகுவிடம் படையில் பாதியை அழைத்துக் கொண்டுபோய், தாரகாசுரனை அழித்து விட்டு வரும்படி கட்டளையிட்டார். தலைவனின் கட்டளைப்படி வீரபாகுவின் தலைமையில் முருகனின் படைகள் மாயாபுரி பட்டினத்திற்குள் நுழைந்தன. இதை அறிந்த தாரகாசுரனும் பெரும் படையுடன் எதிர்த்து வந்தான். கடும் போர் நடந்தது. இருபக்கத்திலும் வீரர்கள் இறந்து விழுந்தனர்.

போர்க்களத்தில் நின்று யுத்தம் செய்த தாரகாசுரன், முருகப்படையின் வீரரான, வீரகேசரியை தன் கதாயுதத்தால் மார்பில் அடித்து சாய்த்தான். இதை கண்ட வீரபாகு வெகுண்டெழுந்து, தாரகாசுரனைக் கடுமையாக தாக்கினான். இதனால் கோபம் கொண்ட தாரகாசுரன், திரிசூலத்தால் வீரபாகுவின் மார்பில் குத்திச் சாய்த்தான். மூர்ச்சையாகி விழுந்த வீரபாகுவை தாரகாசுரன் எள்ளி



நகையாட, முருகனின் படைகள் நாலாபுறமும் சிதறி ஓடின. மயக்கம் கலைந்து எழுந்த வீரபாகு, மீண்டும் மூர்க்கத் தனமாக தாக்கினான்.

எதிர் தாக்குதல் நடத்த முடியாமல் தாரகாசுரன் தன் மாய வேலைகள் மூலம் எலியாக மாறி, கிரவுஞ்ச மலைக்குள் சென்றான். வீரபாகுவும் அவனை தொடர்ந்த மற்ற வீரர்களும் விடாது மலைக்குள் நுழைய, மலை தன் வேலையைக் காட்ட ஆரம்பித்தது. தாரகாசுரனின் அசுரப்படைகள் முருகப்பெருமானின் படைகளை பெரிய அளவில் தாக்கி அழித்தன. இதை நாரதர் மூலம் அறிந்த முருகப்பெருமான், நேரடியாக போர்க் களத்திற்கு வந்தார்.

வந்தவரின் வலிமை அறியாத தாரகாசுரன், சிறுவன் என முருகனைக் கிண்டல் செய்தான். கோபம் கொண்ட முருகப்பெருமான் அவனை கடுமையாகத் தாக்க ஆரம்பித்தார். தாக்குதலைச் சமாளிக்க முடியாமல் மீண்டும் எலியாக மாறி, மலைக்குள் நுழைந்து மாய வேலைகளைக் காட்ட ஆரம்பித்தான். முருகப் பெருமான் தன் வேலாயுதத்தைக் கையில் எடுத்து, வீசி எறிந்தார். துள்ளி வந்த வேல், மலையைப் பல கூறுகளாக்கி உடைத் தெறிந்து, தாரகாசுரனைக் கொன்றது. அதன் பிறகு முருகப்பெருமான், தெய்வானையை மணந்தார். அந்த நாளே பங்குனி உத்திரமாகும்.

# வாஸ்து தகவல்




வீட்டில் பப்பாளி மரம், கறிவேப்பிலை மரம் மிகவும் கவனித்து வளர்க்க வேண்டும். பப்பாளி மரம் பெண்களையும், கறிவேப்பிலை ஆண்களையும் குறிக்கும். முட்கள் உள்ள செடியை வீட்டில் வளர்த்தால் பணம் தங்காது. ஜாதி முல்லை, மல்லிகை, பாதிரி, தாமரை, தும்பை, பாரிஜாதம், சாமந்தி போன்ற விநாயகர் மலர்களை வீட்டின் எல்லைக்குள் வளர்பது மனை தோசத்தைச் சரி செய்யும். தனியாக தென்னை மரத்தை வீட்டில் வளர்க்க கூடாது. தென்னை பிள்ளை மரத்தை ஜோடியாகத்தான் வளர்க்க வேண்டும்.

நன்றாக வளர்ந்த வேப்பமரத்தை அது மீண்டும் வளராமல் வெட்டபட்டால் அந்த வீட்டில் உள்ள ஒற்றுமை, சந்தோசம் ,ஆரோக்கியம் கெட்டு விடும். துணை இல்லாத அல்லது மறு கன்று இல்லாத வாழை மரத்தை வெட்டியவருக்கு வம்ச விருத்தி இருக்காது. ஒற்றை பனைமரம் உள்ள இடத்தில் வீடு கட்டக் கூடாது. வீட்டின் வாசலில் அல்லது நிலகதவைத் திறந்தவுடன் முருங்கை மரம் அல்லது மாமரத்தைப் பார்க்கக் கூடாது.

அசைவ கழிவுகள், மலமூத்திர கழிவு தேக்கம், பழைய துணிகள், குப்பைகள் போன்றவற்றை வாசலில் இருக்க கூடாது. சந்தன முல்லை, துளசி, பவளமல்லி, பன்னீர் செடி, திருநீர்பத்திரி, கற்பூரவள்ளி போன்ற தெய்வீக வாசனை தாவரங்கள் வளர்க்க, அம்பாளின் அருள் ஆசிகள் கிடைக்கும். கோபுரம் நிழல் அல்லது கொடிமரத்தின் நிழல் நம்முடைய மனையின் மீது விழாத படி வீடு கட்டவேண்டும். மேலும் பெருமாள் கோவிலின் பின்புறமும் சிவன், கணபதி கோவில் எதிர் புறமும் வீடு கட்டக் கூடாது.



# வளமான வாழ்வு தரும் வலம்புரி சங்கு

நாம் தினமும் வழிபடும் பல கடவுளர்களின் கைகளில் ஓம்காரத்தை வெளிப்படுத்தும் சங்கு இருப்பதை நாம் காணலாம். பூவுலகம் தோன்றிய நாள் முதல் ஏற்பட்ட ஒலி அலைகளும், ஒளி அலைகளும், பஞ்ச பூதங்களின் மூலமாக தமது அதிர்வுகளை வெளிப்படுத்தியவாறு இருக்கின்றன. சாதாரணமாக நமக்கிருக்கும் கேட்கும் சக்தி மற்றும் பார்க்கும் திறம் ஆகியவற்றால் மட்டுமே அவற்றை அறிவது சிரமமான ஒன்று.

இயற்கையில் உள்ள பல பொருட்களில், ஒலி அலைகளின் மூலாதாரமாக இருக்கும் ஓம்கார ஸ்வரூபம் தாமாக வெளிப்படுவதாக பல ஆன்மிக பெரியோர்கள் கண்டறிந்துள்ளார்கள். குறிப்பாக சங்கின் மூலம் ஓம்காரம் வெளிப்படுவதை பலரும் அறிந்துள்ளனர்.

பாற்கடலில் தோன்றியது தேவர்கள் மற்றும் அசுரர்களால் பாற்கடல் கடையப்பட்டபோது வெளிப்பட்ட, பதினாறு வகையான தெய்வீகப் பொருட்களில் வலம்புரி சங்கும் ஒன்று. அந்த சங்குதான் மகாவிஷ்ணுவின் இடக்கையில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு தெய்வமும் தங்களுக்கென்று தனித்தனியாக சங்குகளை வைத்திருப்பதாக ஆகமங்களும், புராணங்களும் விளக்குகின்றன.

மணி சங்கு, துவரி சங்கு, பாருத சங்கு, வைபவ சங்கு, பார் சங்கு, துயிலா சங்கு, வெண் சங்கு, பூமா சங்கு, திரி சங்கு என்ற எட்டு வகை சங்குகள் கடலில் உற்பத்தி ஆவதாக

கூறப்படுகிறது. அதில் வலம்புரி சங்குக்கு மட்டும் விசேஷ சக்தி இருப்பதாக சாஸ்திரங்கள் சொல்கின்றன. சங்கின் வகைகள் வைணவ ஆகமங்களில் ஒன்றான வைகானஸ (விகனஸ) ஆகமத்தில், ஒவ்வொரு தெய்வத்துக்கும் உரிய சங்குகள் பற்றி குறிப்புகள் இருக்கின்றன.

திருமலை வேங்கடவன் கைகளில் மணி சங்கும், ரங்கநாத சுவாமியின் கைகளில் துவரி சங்கும், அனந்த பத்மநாப சுவாமியின் கைகளில் பாருத சங்கும், பார்த்த சாரதி பெருமாளின் கைகளில் வைபவ சங்கும், சுதர்ஸன ஆழ்வாரது கைகளில் பார் சங்கும், சவுரி ராஜ பெருமாள் கையில் துயிலா சங்கும், கலிய பெருமாளின் கரங்களில் வெண் சங்கும், ஸ்ரீநாராயண மூர்த்தியிடம் பூமா சங்கும் இருப்பதாக வைகானஸ ஆகமம் குறிப்பிடுகிறது.

பொதுவாக வீடுகளில் அமைந்திருக்கும் வாஸ்து குறைகளை நீக்குவதற்கு, மஞ்சள் கலந்த நீரில் துளசியை இட்டு, சங்கு தீர்த்தமாக காலை நேரங்களில் தெளித்து விட்டால் அந்த குறைகள் நீங்குவதாக ஐதீகம். பழங்காலத்தில் மக்கள், செல்வ செழிப்போடு இருக்க, வீடுகளின் தலை வாசலில் சங்கு பதித்து வைப்பது வழக்கம். அதாவது, ஐந்து வெள்ளிக் கிழமைகளில் மகாலட்சுமிக்கு உரிய வசிய பூஜை செய்த வலம்புரி சங்கை, வீட்டின் கதவு நிலைக்கருகில் வாசல் படியில் பதித்து விடுவார்கள். அதன் மூலம் குறைகள் இல்லாத வாழ்க்கை அமைவதாக அவர்கள் நம்பினார்கள்.

கோவில் மணி பெரும்பாலான கோவில்களில் மணி அடிப்பது மற்றும் சங்கு ஊதுவது போன்ற நடைமுறைகள் இருப்பதை கவனித்திருப்போம். சங்கு ஊதுவது என்பது தற்போதைய சூழலில், அபசகுனம் போன்ற ஒரு பிரமையை ஏற்படுத்தியிருக்கிறது. வேதங்களின் உட்பொருளான ஓம்கார மந்திரத்தை நினைவுபடுத்துவதாகவும், ‘அர்த்தம்’ எனப்படும் பொருள் வளத்தை தருவதாலும் கடவுளுக்கு முன்பு வைத்து வணங்கப் படும் தன்மையை சங்கு பெற்றிருக்கிறது. மேலும், மங்களகரமான பூஜை வேளைகளில் தேவையற்ற பேச்சுகள் காதில் விழுந்து, பக்தி மனோபாவத்தைக் குறைத்து விடாதிருக்க சங்கநாதம் உதவி செய்கிறது.

கோவில்களிலும், வீடுகளிலும் பூஜை செய்யும் போது சங்கு ஊதுவது பலகாலமாக நம் நாட்டில் இருந்து வருகிறது. மகாகவி பாரதியும் ‘சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே..’ என்று வெற்றியைப் பறை சாற்றும் பொருளான சங்கு பற்றி பாடுகிறார். கிருமிகளைக் கொல்லும் சங்கிற்கு உடலை பாதிக்கும் நுண்கிருமிகளை அழிக்கும் தன்மை உள்ளது என்று நம் முன்னோர் நம்பினார்கள். அதனால்தான் தீர்த்தம் சங்கில் தரப்படுவது விசேஷமாக கருதப்பட்டது.

குழந்தைகளுக்கு அக்காலத்தில் மருந்தையும், பாலையும் சங்கில் ஊற்றி தரும் வழக்கம் நம் வீடுகளில் இருந்தது. சங்கநாதம் கேட்கும் இடங்களில் மகாலட்சுமி வாசம் செய்வதாக ஐதீகம். மேலும் பெண்கள் வளையல்கள் அணிவதை பார்த்திருப்போம். ‘வளை’ என்பது சங்கு என பொருள்படும். ஆரம்ப காலங்களில் சங்கின் மூலமாகத்தான் இது

தயாரிக்கப்பட்டது. பின்னர் கண்ணாடி, தங்கம், வெள்ளி என உபயோக முறைகள் மாற்றப்பட்டுவிட்டன. சங்கு ஆபரணமாக பயன்படுத்தப்பட்டதோடு, ஆயுர்வேத வைத்தியத்தில் பஸ்பமாகவும் பயன்படுகிறது.

அட்சய திருதியை மக்களிடையே பிரபலமாக இருக்கும் அட்சய திருதியை நாளன்று, வலம்புரி சங்குடன் தங்கம் வாங்கி வீட்டிற்கு கொண்டு வந்தால் ஐஸ்வர்ய வளம் நாளும் வளரும் என்பது வட மாநிலங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் நம்பிக்கையாகும். வலம்புரி சங்கை வெறுமனே ஒரு தட்டில் வைக்கக்கூடாது என்பதால், அதற்கு பொருத்தமான அளவில் வெள்ளிக் கவசம் செய்து பொருத்திய பின்னர் வீட்டுக்கு கொண்டு வந்து, அதற்கான 'ஸ்டாண்டில்' வைப்பது அவசியம். அதற்கு தினமும் பசும்பால் அபிஷேகம் செய்து, பூஜை செய்து வந்தால் மகாலட்சுமி அந்த வீட்டில் நிரந்தரமாக தங்கியிருப்பாள் என்பது உறுதி.

வீட்டில் அலங்காரமாக வைக்கப்பட்டிருக்கும் வலம்புரி சங்கானது, குபேரனது அருளை பெற்றுத் தருவதோடு, மகாலட்சுமியின் நித்திய வாசத்தையும் அருளக்கூடியது. வலம்புரி சங்கில் தீர்த்தம், துளசி இட்டுப் பூஜை செய்து மங்கள ஸ்நானம் செய்வது, சகல தோஷ நிவாரணம் ஆகும். வலம்புரி தீர்த்தம் கொண்டு சுவாமிக்கு அபிஷேகம் செய்வித்தாலும், கடும் தோஷங்கள் விலகும். கார்த்திகை சோமவாரம் எனப்படும் திங்கட்கிழமையன்று இறைவனுக்கு சங்காபிஷேகம் செய்யப்படும். அப்போது 108 சங்கு அபிஷேக பூஜைக்கு நடுவில் வலம்புரிச்சங்கு உருவத்தில் குபேரன் எழுந்தருளுவதாக ஐதீகம்.

கண்களுக்கு புலப்படாத வாஸ்து தோஷம் இருக்கும் வீட்டில், துளசி தீர்த்தத்தை சங்கில் இட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலை வேளையில் வீடுகளில் தெளித்து வந்தால் நன்மை உண்டாகும். ஜாதகத்தில் செவ்வாய் தோஷம் உள்ள பெண்கள், செவ்வாய் தோறும் வலம்புரி சங்கில் பால் வைத்து அங்காரகப் பூஜை செய்து வந்தால் திருமண பாக்கியம் கைகூடும். கடன் தொல்லையால் அவதிப்படுபவர்கள் வலம்புரி சங்குக்கு, பவுர்ணமி தோறும் குங்கும அர்ச்சனை செய்வது சிறப்பு. 16 எண்ணிக்கையில் வலம்புரி சங்கு கோலமிட்டு, நடுவில் தீபம் ஏற்றி வைத்து பூஜை செய்வது நல்லது.

சுத்தமாகவும், கச்சிதமாகவும் பூஜிக்கப்படும் வலம்புரி சங்கு உள்ள வீட்டிற்கு, பில்லி சூனிய பாதிப்புகள் நெருங்காது. வீட்டில் உள்ள பூஜை அறையில், சிறு தட்டில் பச்சரிசி, அதில் சங்கை வைத்து, பூ சூட்டி பொட்டு வைத்து வணங்கி வந்தால் உணவு பஞ்சம் இருக்காது. முச்சங்கு ஒலி பழங்காலங்களில்



ஒரு மனிதருடைய வாழ்வில், மூன்று முறை சங்கநாதம் ஒலிக்கப்பட்டது. அதன் மூலமாக எழக்கூடிய சுப நாதமானது, சம்பந்தப்பட்ட மனிதருக்கு நற்பலன்களை உண்டாக்குவதாக நம்பப்பட்டது. தற்போது நடைமுறையில் அவ்வளவாக இல்லாத அந்த பழக்கத்தில் பல்வேறு உள்ளர்த்தங்கள் இருக்கின்றன.

ஒரு மனிதரின் வாழ்வில் ஒலிக்கப்பட்ட மூன்று சங்கநாதங்கள் பற்றிய தகவல்களை இங்கே காணலாம். முதல் சங்கு 'முதற்சங்கம் அமுதூட்டும், நடுச்சங்கம் நல்வழி காட்டும், கடைச்சங்கம் காதவழிபோம்' என்று நமது முன்னோர்களால் குறிப்பிடப்பட்டது. முதல் சங்கு என்பது ஒரு குழந்தை பிறந்தவுடன் ஒலிக்கப்படுவதோடு, முதன்முதலாக சங்கில் பாலூட்டுவதும் மரபாக இருந்து வந்தது. அதிலும் வலம்புரி சங்கு மூலம் பாலூட்டப் படும் ஆண் குழந்தை வீரமும், நன்னெறியும் கொண்டதாக வளருவதாக கருதப்பட்டது.

இரண்டாவது சங்கு என்பது ஒருவரது திருமணத்தின்போது ஒலிக்கப்படும். அதாவது இரண்டு உள்ளங்களை ஒருங்கிணைக்கும் சம்பிரதாய நெறிமுறையாக இருந்து வந்தது. காதில் சங்கை வைத்து கேட்டால் மட்டுமே ஓம்கார ஓசை கேட்கும். அதேபோல ஒருவருக்கு ஒருவர் அவரவர்களுடைய கருத்துக்கு மதிப்பு கொடுத்து கேட்பதன் வாயிலாக, பிரச்சினைகளை காதோடு காது வைத்ததுபோல சரி செய்து கொள்ள வேண்டும் என்ற அர்த்தத்தில் சங்கநாதம் ஒலிக்கப்பட்டது.

மூன்றாவது சங்கு இது ஒருவரது மரணத்தின் பின்பு ஒலிக்கப்படுவதாகும். இறந்தவர், இறைவனுக்கு சமமாக சொல்லப்பட்டது. இனம், மதம், உயர்வு, தாழ்வு, ஜாதி வேற்றுமைகள் ஆகிய அனைத்திற்கும் அப்பாற்பட்டு எல்லோரும் கூடும் இடங்கள் மூன்று உண்டு. அவை ஆலயம், பள்ளிக்கூடம், மயானம் ஆகியவை. ஒருவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் இறுதியில் அனைவரும் ஒன்றுகூடும் மயான பூமிக்கு அவர் கொண்டுவரப் படும்போது, புனிதம் பெற்றவராக வரவேண்டும் என்ற கருத்தில் ஒலிக்கப்படுவது மூன்றாவது சங்கநாதம் ஆகும்.




## ஆலயங்களுக்கான அறிவித்தல்!

'அகரதீபம்' இதழை பெற்றுக் கொள்வதற்கும், ஆலயங்களுக்கான விளம்பரங்களைப் பிரசுரிக்கவும் எம்மோடு தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு

**00 49 176 47 11 87 11**



# ருத்திராட்சம்

‘அக்ஷம்’ என்றால் கண்கள் என்று ஒரு பொருள் உண்டு. ‘ருத்ராக்ஷம்’ என்றால் சிவனின் கண்கள் என்று சொல்லலாம். மனிதர்களுக்கு உடலில் உள்ள உறுப்புகள் விதவிதமாக அமையலாம். ஆனால், கண்கள் எல்லோருக்கும் ஒன்று போல் தான் அளவு. மேலும் 2 கண்கள்தான் உண்டு. இதுவே ஒளியைக் கொண்டு வழிகாட்டுதல் என்னும் செயலைச் செய்கிறது.

2 கண்கள் இருந்தாலும் ஒரு பொருளைப் பார்க்கும் பொழுது, இரண்டும் ஒன்று போலத்தான் பார்க்கும். உடலில் கண்பார்வை இல்லை என்ற நிலை வந்தால், இதை விட மிகப் பெரிய தண்டனைக் கிடையாது. இப்படி உள்ள கண்கள் சிவ பெருமானுக்கு வலது, இடது மற்றும் அக்னி என்னும் புருவ மத்தியில் ஒன்று உள்ளது. இந்தக் கண்ணை ‘ஞான கண்’ என்றும், ‘சுடர்விழி’ என்றும் சொல்லலாம்.

இந்த கண்தான் மண் மீது விழுந்து, தாவரமாக முளைத்து, ருத்ராக்ஷம் என்று பெயர் கொண்டு கனிகளை முதலில் தோற்றுவித்து, பிறகு காய்களாக உருமாறி, உதிர்ந்து மண்ணில் விழுகிறது. இதில் பல வகைகள் உண்டு. இந்த மணிகளின் தன்மைகளைப் புரிந்து கொள்வோம்.

எந்த மாதிரியான வெப்பம் / குளிர் என்றாலும் தாங்கும் சக்தி படைத்தவைகள் இந்த மணிகள். மனிதனின் உடலில் இவைகள் அணியப்பட்டு இருக்கும் பொழுது, உடலில் உள்ள வெப்பத்தைச் சரி செய்யும். கழுத்தில் கட்டப்பட்டு இருக்கும் பொழுது, ஜடார்அக்னியைச் சமம்படுத்தி நன்மை செய்யும். மேலும், கழுத்தில் இருக்கும் பொழுது அதுனுடன் சேர்த்து நாம் சுவாசம் செய்வோம். இப்படி உள்ளே போகும் பிராணன் ரத்தத்துடன் கலந்து நன்மை செய்யும். இப்படி கொஞ்சம் கொஞ்சமாக ஒரு விகிதத்துடன் உடலில் கலந்து, ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தும். நாம் குளிக்கும் பொழுது நீரில் கலந்து, மேல் தோலின் வழியாக உள்ளே சென்று கொண்டு இருக்கும். இதுவும் ஒரு வகையில் உடலுக்கு வெளியில் ஒரு பாதுகாப்பு தரும். இப்படி பல நன்மைகள் செய்யும் இந்த மணிகள் பல வகை உண்டு.

உருத்திராட்சத்தை அக்குமணி என்றும் குறிப்பிடுவர். பெண்களுக்கு மாங்கல்யம் போலச் சிவத் தொண்டர்களுக்கு அணிகலனாகத்

திகழ்வது இந்த உருத்திராட்சம் தான். இதைக் 'கண்டிகை' என்றும், 'தாழ்வடம்' என்றும் கூறுவர். உருத்திராட்சத்தைத் தரிசித்தால் லட்சம் மடங்கு புண்ணியம். தொட்டால் கோடி மடங்கு புண்ணியம். அணிந்தால் நூறு கோடி புண்ணியம். ஜெபித்தால் நூறுகோடி மடங்கு புண்ணியம் அடைவதாகப் புராணங்கள் கூறுகின்றன.

நெல்லிக்காய் அளவுள்ள உருத்திராட்சம் உத்தமம். இலந்தைப்பழ அளவு மத்திபம். கடலை அளவு அதமம். புழுக்கள் குடைந்ததும், நசுக்கியதும், நோயுற்றதும் அணியக்கூடாத உருத்திராட்சங்கள் ஆகும். ஒரே அளவுள்ளதும், உறுதியானதும், பெரியதும், சம முத்துகள் போன்றுள்ளதுமான உருத்திராட்சங்களைப் பட்டுக் கயிற்றில் கோத்து, பின் உடலில் அணிய வேண்டும்.

**உருத்திராட்சத்தின் முகம் மற்றும் அதன் அதிதேவதை.**

இருமுக உருத்திராட்சம் அர்த்தநாரிஸ்வரர் உருவம் உடையது. இதனை அணிந்தால் எப்போதும் இன்பம் உண்டாகும். மும்முக உருத்திராட்சம் மூன்று அக்னியின் சொரூபம் கொண்டது. இதனை அணிவது அக்னி தேவர்க்கு இன்பமூட்டும். நான்கு முக உருத்திராட்சம் பிரம்மனின் சொரூபம். இதை அணிந்தால் பிரம்ம தேவன் இன்பமடைகிறான். ஐந்து முக உருத்திராட்சம் பிரம்ம சொரூபம் கொண்டது. இதனை அணிவதால் நரஹத்தி அழிகிறது. ஆறுமுக உருத்திராட்சம் அதிதேவதை சுப்ரமண்யர். இதை அணிந்தால் அதிக செல்வமும் ஆரோக்கியமும் கிடைப்பதுடன், பக்தியும், அறிவும், செல்வமும், கிடைக்கும்.

## எந்த நட்சத்திரம் உள்ள நபர்கள் எதை அணிய வேண்டும்

1. அஸ்வினி - ஒன்பது முகம்
2. பரணி - ஆறுமுகம், பதிமூன்று முகம்
3. கார்த்திகை - பனிரெண்டு முகம்
4. ரோஹிணி - இரண்டு முகம்
5. மிருகசீரிஷம் - மூன்று முகம்
6. திருவாதிரை - எட்டு முகம்
7. புனர்பூசம் - ஐந்து முகம்
8. பூசம் - ஏழு முகம்
9. ஆயில்யம் - நான்கு முகம்
10. மகம் - ஒன்பது முகம்
11. பூரம் - ஆறுமுகம், பதிமூன்று முகம்
12. உத்திரம் - பனிரெண்டு முகம்
13. ஹஸ்தம் - இரண்டு முகம்
14. சித்திரை - மூன்று முகம்
15. ஸ்வாதி - எட்டு முகம்
16. விசாகம் - ஐந்து முகம்
17. அனுஷம் - ஏழு முகம்
18. கேட்டை - நான்கு முகம்
19. மூலம் - ஒன்பது முகம்
20. பூராடம் - ஆறுமுகம் பதிமூன்று முகம்
21. உத்திராடம் - பனிரெண்டு முகம்
22. திருவோணம் - இரண்டு முகம்
23. அவிட்டம் - மூன்று முகம்
24. சதயம் - எட்டு முகம்
25. பூரட்டாதி - ஐந்து முகம்
26. உத்திரட்டாதி - ஏழு முகம்
27. ரேவதி - நான்கு முகம்



ஆறுமுக உருத்திராட்சத்திற்கு விநாயகரை அதிதேவதை என்றும் சொல்வார்கள். ஏழு முக உருத்திராட்சத்திற்கு அதிதேவதை சப்தமாதா. இதனை அணிந்தால் ஞானமும், ஆரோக்கியமும், செல்வமும் கிடைக்கும். எட்டு முக உருத்திராட்சம் அணிந்தால் அஷ்ட வசுக்களும், கங்கையும் ப்ரிதி அடையும். அதிதேவதை அஷ்டவசு. ஒன்பது முக உருத்திராட்சத்தை அணிந்தால் நவசக்திகளும் இன்பமடையும். இதன் அதிதேவதை நவசக்தி. பத்துமுக உருத்திராட்சத்திற்கு அதிதேவதை எமன். இதனை அணிந்தால் பாவங்களுக்கெல்லாம் பரிகாரம் ஏற்படும். பதினொரு முக உருத்திராட்சத்திற்கு அதிதெய்வம் பதினொரு உருத்திரர். இது சகல சௌபாக்கியங்களையும் விருத்தியடையச் செய்கிறது.

பன்னிரண்டு முக உருத்திராட்சம் மகாவிஷ்ணுவின் சொரூபம். இது பன்னிரு ஆதித்ய சொரூபம் என்று அழைக்கப்படுகிறது. பதின்மூன்று உருத்திராட்சம் போகத்தையும், சித்தியையும், சுகத்தையும் கொடுக்கிறது. இதனை அணிந்தால் காமதேவன் மகிழ்ச்சியடைகிறான். உருத்திர நேத்திரத்தில் உண்டாகிய பதினான்கு முக உருத்திராட்சம் சகலவிதமான நோய்களையும் நீக்கி என்றும் ஆரோக்கியத்தைக் கொடுக்கிறது.

108 உருத்திராட்சம் கொண்ட மாலையை எப்போதும் மார்பில் அணிந்திருப்பவன் அடுத்தடுத்து செய்த அஸ்வமேதயாக பலத்தை அடைகிறான். உருத்திராட்சத்தின் அடி பிரம்மா. நாளம் விஷ்ணு. முகம் உருத்திரர். பிந்து சமஸ்தேவர்கள். அர்ச்சனை, ஹோமம் முதலியவற்றின்போது இதனை அணிந்தால் அஸ்வமேத யாகத்தின் பலனைக் கொடுப்பதோடு, எல்லா பாவங்களிலிருந்தும் விடுதலை கிடைக்கிறது. உருத்திராட்ச மாலையைக்கொண்டு ஜெபித்தால் அதிக பலம், அதிக புண்ணியம். தலையில் அணிந்து குளித்தால் கங்கையில் நீராடிய பலன் கிட்டும். குறிப்பாகச் சிவனடியார்களால் போற்றப்படும் இரு முகம், ஐந்து முகம், பதினொரு முகம், பதினான்கு முகம் கொண்ட உருத்திராட்சங்களை அன்போடு பூஜித்து அணிகின்ற மானிடர்கள் எல்லாரையும்விட அவரே செல்வம் நிரம்ப உடையவராகிறார்.

தீட்சை பெற்ற பெண்களும் உருத்திராட்சத்தை அணியலாம். உருத்திராட்ச தரிசனம் பாவத்தைப் போக்கும். தொட்டால் சகல வெற்றிகளையும் கொடுக்கும். குவிக்கும். பிறப்பு - இறப்பு தீட்டுக்காலங்களில் உருத்திராட்சம் கண்டிப்பாக அணியக்கூடாது. சிவன் நாமத்தை இடைவிடாமல் உச்சரிப்போரும், புனிதம் மிக்க உருத்திராட்சத்தை அணிந்திருப்போரும் சிவ பக்தர்களில் தலைசிறந்தோர் என்று கூறுகின்றனர். 'ஆயமாமணி ஆயிரம் புனைந்திடில் அவரை மாலயன் நான்முகன் புரந்தரன் வானவர் முதலோர் பாயுமால் விடைப் பரமெனப் பணிகுவர் என்றால் தூயமாமணி மிலைந்தவர் மனிதரோ சொல்வீர்' -என்று உருத்திராட்சத்தின் மேன்மையைப் பிரம்மோத்தர காண்டம் சிறப்பித்துக் கூறுகின்றது

# தாயுமானவர் பொன்மொழிகள்

*1.* கடவுளின் படைப்பில் அற்பமானது என்று ஏதுமில்லை. *2.* நல்லாருக்கு சேவை செய்வதன் மூலம் வாழ்வில் எல்லா இன்பங்களையும் பெற்று வாழலாம். *3.* மனிதன் தன்னைத் தானே சிறைப்படுத்திக் கொண்டு வாழ்கிறான். இதிலிருந்து மீள கடவுளே வழிகாட்ட வேண்டும். *4.* பிறருடைய குறைகளை பற்றி சிந்திக்க வேண்டாம். நல்லதை மட்டுமே எப்போதும் பேசுங்கள். *5.* மனிதன் தன்னைக் கடவுளின் குழந்தையாக நினைத்துக் கொண்டால், வாழ்வில் தொல்லைகள் மறைவதுடன் நன்மையும் ஏற்படும்.

*6.* குழந்தையிடம் குற்றம் காணாமல் குணத்தைக் காண்பவள் தாய். அந்தத் தாயின் உள்ளத்தை அறிபவன், கடவுளின் கருணையை அறிபவனாகிறான். *7.* மனித உள்ளத்தில் தெய்வம் மனசாட்சியாய் உள்ளது. அதைச் சுட்டிக்காட்டவோ, உதாசீனப்படுத்தவோ நம்மால் முடியாது. *8.* வாழ்வில் கடந்த பகுதி கனவாகப் போய் விட்டது. எஞ்சியிருக்கும் நாட்களும் கனவாகவே போய் விடும். இந்த உண்மையை உணர்ந்து, இறைவனிடம் உலக வாழ்வு நிலையானது என்று நினைக்கும் அறியாமையை அகற்ற பிரார்த்திப்போம்.

*9.* நல்லவராக அனைவரும் விரும்புவதால் எதிர்காலத்தை நோக்கி காத்திருக்கின்றனர். பசித்தவன் இப்போதே சாப்பிட விரும்புவது போல், கடவுள் அருள் கிடைக்க இதுவே சரியான நேரம் என்பதால் முழு மனதுடன் முயற்சிக்க வேண்டும். *10.* உலகில் அனைத்தும் அழியும் தன்மையுடையது. குறிப்பாக, நமக்கு வேண்டப்பட்டவர்கள், நண்பர்கள், செல்வம் போன்றவை அழிந்துவிடும். ஆனால், உண்மை மட்டும் உறுதியாக நிற்கிறது. அந்த உண்மையும் இறைவனும் ஒன்றாகும்.

*11.* உயர்வைத் தேடி அலைகிறவனுக்கு அது கிடைப்பதில்லை. உயர்வு என்பது தன்னை அடையும் தகுதியுடையவனைத் தேடிச் சென்று அவனை உயர்த்துகிறது. *12.* உங்களிடம் சிலர் நல்ல முறையில் பேசலாம். ஆனால் மனதிற்குள் கள்ளம் இருக்கும். இப்படிப்பட்ட பேச்சைக் கண்டு ஏமாறாதீர்கள். நேர்மையாக இவ்வுலகில் யார் நடக்கிறார்கள் என உணருகிறீர்களோ அவர்களுடன் மட்டும் உறவு கொள்ளுங்கள். பேச்சுக்கும் நடத்தைக்கும் சம்பந்தம் இல்லாதவர்களுடன் உறவு கொள்வது பிழையாகும்.

*13.* மனம் சலிக்காமல் இறைநெறியில் ஆழ்ந்து வருபவனுக்கு செல்வம் சேரும். புத்திரர்களும், உறவினர்களும் பக்கபலமாக இருப்பார்கள். நல்ல பதவி கிடைக்கும். எமன் கூட அணுகாத நிலை ஏற்படும். உடல்நலம் நன்றாக இருக்கும். கல்வி ஞானமும், மெய்ஞ்ஞானமும் கைகூடும். *14.* பகுத்தறிவு இல்லாதவர்களும், சுகபோகத்திற்காகவே வாழ்கின்றவர்களும் தங்கள் பிழைகளை ஒருநாளும் அறிந்து கொள்ள முயற்சிக்க மாட்டார்கள்.

*15.* தவறு செய்தல் மனித இயல்பு என்பர். ஆனால், பிழை என்று உணர்ந்ததும் இனிச் செய்வதில்லை என்று மன உறுதி எடுத்து கொள்ள வேண்டும். *16.* நான் தவறே செய்யாதவன் என்று யார் ஒருவனும் கூறிக் கொள்ளமுடியாது. தவறு திருத்தத்திற்கு உரியது. திருத்த படும்போது பிழைகள் அனைத்தும் சரியாகிவிடும். *17.* தவறு செய்துவிட்டதாக பகிரங்கமாக ஒத்துக் கொள்வதில் தோல்வி என்பதே கிடையாது. அவமானமும் கிடையாது. அதுதான் நிஜமான வெற்றி என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

*18.* "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே". *19.* நம் தவறுகளை புறம்காட்டும் கண்ணாடி போல வெளிப்படையாகவும், பிறரது தவறுகளை உள்முகம் காட்டும் கண்ணாடி போல மறைவாகவும் பார்க்கப் பழகுங்கள். தவறுகளின் உண்மையான தன்மையை அறிய இதுவே சிறந்தவழி.



ANNIVERSARY
18
YEAR
CELEBRATIONS

Radio - by - Phone

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

00 49 231 700 977 60

அழையுங்கள்! வானொலியைத்
கேட்டு மகிழுங்கள்..!!!

மேலதீக விபரங்களுக்கு... www.etr.fm